

*முச்சந்தி முரளி*

சிவனே எண்டு
இருந்தவையை
தூண்டிவிட்டு இப்ப
சிவன் கோயில்ல
ஒண்டா போராட
வைச்ச பெருமை
அரசுக்குத் தான்

REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - ரூபா 30    செய்தி: 021 493 0000    விளம்பரம்: 021 493 1111

சுடர் :35    கதிர் :302 புரட்டாதி 11 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 27 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# முட்டுக்கட்டைகளை தகர்த்தெறிந்து உணவு தவிர்ப்புப் போராட்டம்



## தமிழ்க் கட்சிகள் ஓரணியில் திரண்டதால் சாத்தியமானது

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 27

அடிப்படை மனித உரிமையான அஞ்சலிக்கும் - நினைவுகூரும் உரிமையை வலியுறுத்தி, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் சாவகச்சேரி சிவன் கோயில் முன்றலில் நேற்று நடைபெற்றது.

26

## சுமந்திரன் அணி கூண்டோடு ‘மிஸ்ஸிங்’

யாழ்ப்பாணம், செப். 27

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும்

26

## இராணுவமயமான சாவகச்சேரி

யாழ்ப்பாணம், செப். 27

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கான தடையை எதிர்த்து அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட சாவகச்சேரி பிரதேசத்தில் இராணுவத்தினர்

26

## ஒட்டுசுட்டானிலும் போராட்டம்



முல்லைத்தீவு, செப். 27

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளின் இறுதி நாளான நேற்று

26

## மட்டக்களப்பிலும் நினைவேந்தல்

மட்டக்களப்பு, செப். 27

தியாகி திலீபனின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல் மட்டக்களப்பில் நடைபெற்றது. கல்லடி விஷ்ணு ஆல

26

## தமிழர் தாயகத்தில் நாளை முழு அடைப்பு

- பல தரப்புக்களும் ஆதரவு
- வட, கிழக்கு முற்றாக முடங்கும்

26

## வீதியில் விரட்டி வாள்வெட்டு

யாழில் பட்டப்பகலில் பயங்கரம்

26





## உதயன் – சஞ்சீவியை பறித்த பொலிஸார்

*போராட்டக்காரர்கள் குரல் எழுப்பியதும் பின்வாங்கினர்*

யாழ்ப்பாணம், செப். 27

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நாளான நேற்று சாவகச்சேரி சிவன் கோவில் முன்றி

26

## பல்முனை நெருக்குவாரங்களை நொருக்கி எழுச்சிப் பொங்கல்

*வெடுக்குநாறியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்*

வவுனியா, செப். 27

வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரரின் வருடாந்த பொங்கல் விழாவின் இறுதி நாளான நேற்று பல்வேறு தடைகள், நெருக்குவாரங்களுக்கு மத்தியில் 108 பானைகள் வைத்து கோலாகலமாக பொங்கல் இடம்

26



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணப் பல்கலை மாணவர்கள் நேற்றையதினம், வளாகத்தினுள் அமைந்துள்ள நினைவுத் தூபி முன்பாக முழங்காலிருந்து அஞ்சலி செலுத்தினர். (ஒ,5)

## 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமானது

மோடி வலியுறுத்தியதாக இந்திய வெளிவிவகார அமைச்சு அறிக்கை: இலங்கைத் தரப்பு மௌனம்

27

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A+" Fitch Rating "A" (lka)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திலீபன் நினைவேந்தலில் தமிழர்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

**கொழும்பு, செப்ரெம்பர் 27**
**தியாகி திலீபனின் நினைவேந்தல் தடைக்கு எதிராக வழக்கில் முன்னிலையாகும் வரை யாரும் என்னைக் கோரவில்லை. அதனால் இம்முறை நான் வழக்குகளில் முன்னிலையாகவில்லை என்று தெரிவித்துள்ளார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.**

ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தியாகி திலீபனின் நினைவேந்தலை நடத்தக் கூடாதென யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 20 பேரில் யாரும் என்னை முன்னிலையாகும்படி கோரவில்லை. வழக்கொன்றில் முன்னிலையாகுவதெனில் அந்தத் தரப்பினர் சட்டத்தரணியை அணுக வேண்டும். கடந்த முறை யாழ் மாநகரசபை முதல்வர் ஆனல்ட் என்னை தொடர்புகொண்டு முன்னிலையா கும்படி கேட்டுக் கொண்டார். அதனால் முன்னிலையானேன். நினைவேந்தலிற்கு நீதிமன்றம் அனுமதித்தது. அதற்கடுத்த முறையும் அனுமதித்தது. இதே நீதிமன்றம்தான் நினைவேந்தலிற்கு அனுமதியளித்தது. அந்த வழக்கின் தீர்ப்பை மேற்கோள் காட்டியிருந்தாலே நினைவேந்தலுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும். நீதிமன்றத்தில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரே, என்னை ஆனல்ட் அணுகினார். ஆனால், அனைத்தும் முடிந்த பின்னரே அவர் அணுகினார். அதனால் பயனிருக்கவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடைப்பிடிக்க வேண்டுமென மக்கள் தன்னெழுச்சியாக விரும்பியிருந்தனர். ஆனால், திலீபனின் நினைவேந்தலை நடத்த வேண்டுமென அப்படியானளவு உணர்வு தமிழ் மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை - என்றார். (ம-இ)

# சவாரியை தடுத்த பொலிஸார்

முல்லைத்தீவு, செப். 27
முல்லை மாவட்ட சவாரிச் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் மல்லாவி வவுனிக்குளம் குலசிங்கம் சவாரித்திடலில் நேற்று இடம்பெற ஏற்பாடாகியிருந்த மாட்டுவண்டிச் சாவாரிப்போட்டி பொலிஸாரால் இடைநிறுத்தப்பட்டது.

திலீபனின் நினைவு தினத்தால் இந்த நிகழ்வு இடைநிறுத்தப்பட்டது. போட்டி நடைபெறும் மாற்றுத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-21)

# கொழும்பில் இருந்துகொண்டு தமிழர்களை எடைபோடாதீர்!!

## சுமந்திரனுக்கு சரவணபவன் பதிலடி

கொழும்பு, செப். 27
கொழும்பில் இருந்துகொண்டு வடக்கில் உள்ள தமிழ் மக்களின் உணர்வுகளை எடைபோட வேண்டாம் என்று சுமந்திரன் தெரிவித்த கருத்துக்குப் பதிலடி கொடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஈஸ்வரபாதம் சரவணபவன்.

திலீபனின் நினைவேந்தலுக்கு தமிழ் மக்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை என்று சுமந்திரன் தெரிவித்த கருத்துக்குப் பதில் வழங்குகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் சரவணபவன்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சிலர் கொழும்பில் இருந்துகொண்டு தமிழர் தாயகத்தில் நடப்பவற்றை எடைபோடுகின்றனர். தமிழ் மக்களின் எண்ணவோட்டத்தை கொழும்பில் இருக்கும் இவர்களால் எவ்வாறு உணர முடிகின்றது? 2010ஆம் ஆண்டுக்குப்பின்னர் அரசியலுக்கு வந்த சுமந்திரனுக்கு எங்களின் போராட்ட வலி விடுதலை உணர்வு என்பன எப்படித் தெரியும். கடந்த காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட இவ்வாறான விசமத்தனக் கருத்துக்களால்தான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. எனினும் இன்னும் திருந்துவதாகத் தெரியவில்லை.

அதுமட்டுமல்ல இவ்வாறானவர்களின் இத்தகைய உண்மைக்குப் புறம்பான கருத்தை கோத்தாபய தரப்பினர் ஆதாரம்காட்டி வெளியுலகுக்குக் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். தமது கருத்துக்களின் கனதித் தன்மையை அறியாதவர்களாக இவர்கள் இருப்பது வேதனைக்குரியது. தமிழ் மக்கள் எவரும் இவ்வாறான கருத்துக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகக் கொள்ளக்கூடாது - என்றுள்ளது. (ம)

# இணுவிலில் கோர விபத்து

## பறிபோனது பெண்ணின் பாதம்

யாழ்ப்பாணம், செப். 27
இணுவில் சமுர்த்தி வங்கிக் கட்டடம் முன்பாக நேற்று இரவு 6.55 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் பெண்ணின் பாதம் துண்டாடப்பட்டது. மருதனார்மடத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டொல்பின் வாகனமும், யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைப் பக்கம் நோக்கிச் சென்று கொண்டிருந்த 3 மோட்டார் சைக்கிள்களும் மோதிக் கொண்டன.

ஒன்றரை வயதுக் குழந்தைக்கு ஒட்சிசன் வழங்கியபடி மருத்துவ சிகிச்சைக்காக டொல்பின் வாகனம் யாழ்ப்பாணம் நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. முன்னால் சென்ற வாகனத்தை விலத்திச் செல்ல முற்பட்டபோது எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிள்களுடன் மோதுண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஒன்றுடன் ஒன்று கொழுவியதால் மூன்று மோட்டார்சைக்கிள்களும் விபத்துக்குள்ளாகின. இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்கள் உரசல் காயங்களுக்கு உள்ளாகினர். பெண்களுக்கான மோட்டார் சைக்கிளில் சென்ற நகுலேஸ்வரா வீதி கீரிமலை பகுதியினை சேர்ந்த சிறிதரன் சாமினி வயது 21 மற்றும் 22 வயதுடைய யுவதிகளே விபத்தில் தூக்கி வீசப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் இருவருமே மயங்கி வீழ்ந்தனர். அவர்களில் ஒருவரின் பாதம் துண்டாடப்பட்டது. பெண்கள் இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டனர். துண்டாடப்பட்ட பாதத்தை தேடும் நடவடிக்கை நேற்று நீண்ட நேரமாக இடம்பெற்றது. முன்னிரவு வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டும் அவர்கள் தாமதமாக வந்ததாக மக்கள் குற்றம் சுமத்தினர். (ஒ.5)





### பனிக்கன்குளம் கிராமத்தில்

# விவசாய நிலங்களை உடன் பதிவுசெய்யுமாறு கோரிக்கை

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் காணப்படுகின்ற குளங்களின் கீழுள்ள வயல் காணிகளுக்கான ஆவணங்களை வைத்திருக்கின்ற நபர்களை எதிர்வரும் 14 நாள்களுக்குள் தம்மிடம் பதிவு செய்யுமாறு பனிக்கன்குளம் கமக்கார அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள பனிக்கன்குளம், நாவிக்குளம், குஞ்சுமுறியாக்குளம், விளாத்திகுளம், கிழவன்குளம் ஆகிய ஐந்து குளங்களின் கீழ் உள்ள வயல் நிலங்களுக்கு சொந்தக்காரர்கள் 14 நாட்களுக்குள் அதாவது எதிர்வரும் 11ஆம் திகதிக்குள் பனிக்கன்குளம் கமக்கார அமைப்பில் பதிவு செய்யுமாறும் தவறும் பட்சத்தில் இதுவரை காலமும் செய்கை பண்ணப்படாத மற்றும் கமக்கார அமைப்பிடம் பதிவு செய்யப்படாத வயல் நிலங்கள் கிராமத்தில் வயல் நிலங்கள் அற்ற மக்களுக்கு செய்கை பண்ணுவதற்கு வழங்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-246)

# மனிதாபிமான உரிமைகள்கூட தற்போது மறுக்கப்படுகின்றன

## உணவொறுப்புப் போரின் பின்னர் மாவை. சேனாதிராசா தெரிவிப்பு



**கொடிகாமம், செப். 27**

**தமிழ் மக்களின் உரிமைகள் மட்டுமல்ல மனிதாபிமானக் கடமைகளும் கூட தமிழர்களுக்குத் தற்போது மறுக்கப்பட்டு வருவதை நாங்கள் அவதானிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா.**

ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளால் நேற்று நடத்தப்பட்ட உணவொறுப்புப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தியாகி திலீபனின் 33ஆம் ஆண்டு நினைவில் நாங்கள் நிற்கின்றோம். ஒருசில மணிநேரங்களுக்கு முன்னர் தான் போராட்டம் நடைபெறும் இடத்தைத் தெரிவுசெய்யும் அளவுக்கு நெருக்கடிக்குள் நாங்கள் தள்ளப்பட்டோம். தமிழர்கள் தம் உரிமையை மட்டுமல்ல மனிதாபிமானக் கடமையைக்கூட ஆற்றுவதற்கு பல நெருக்குவாரங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் தடைகளையும் நெருக்குவாரங்களையும் கண்டிக்கின்றோம். இதன் தொடர்ச்சியாகவே ஹர்த்தால் போராட்டம் வடக்கு - கிழக்கில் இடம்பெறவுள்ளது.

வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த உணவொறுப்புப் போராட்டம் பல தடைகளுக்கு அப்பால் மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் கிடைத்த வெற்றியே. 10 கட்சிகள் முதன்முதலாக ஓரணியில் ஒன்றுபட்டுள்ளன.

அடுத்ததாக வருகின்ற 28ஆம் திகதி ஜனநாயக அடக்கு முறைக்கு எதிராக, அஞ்சலி செலுத்துவதற்கு மறுக்கப்பட்ட உரிமையை மீட்பதற்காக நாங்கள் நடத்தவிருக்கின்ற வேலைத் திட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என்று அழைக்கின்றோம் என்றார்.

(ம-159,9)



திலீபன் உயிர்நீத்த தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட உணவொறுப்புப் போராட்டத்தின் பின்னர் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ம)

## வீட்டில் வைத்து மதுவிற்பனை இளைஞர் ஒருவர் கைதானார்!

மதுபானப் போத்தல்களை வீட்டில் வைத்து விற்பனை செய்த இளைஞன் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குடல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து விற்பனை செய்யும்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரின் வீட்டில் இருந்து 180 மில்லிலீற்றர் கொள்ளவு உடைய 25 போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன. (ம-25)

## சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற உணவொறுப்புப் போராட்டத்தின் பதிவுகள்....

















## ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டு

வவுனியா பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பழைய மாணவரும் "கிசாளன்" ஒப்பந்த நிறுவனத்தின் உரிமையாளருமான ப.நந்தகுமார் கலந்து கொண்டார். ஆசிரியர்களான யோ. மேகலா, க. இந்துமதி, மற்றும் உடற்கல்வி ஆசிரியர் யோ. லோறன்ஸ் ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வே நடைபெற்றது. (ஐ- 110)

# தெல்லிப்பழை மருத்துவமனைக்கு விரைவில் உள்ளக மருத்துவர்கள்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

தெல்லிப்பழை, செப். 27

**தெல்லிப்பழை மருத்துவமனையில் உள்ளக மருத்துவர்கள் அதிகளவானோர் வெகு விரைவில் உள்வாங்கப்படுவர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவ கலாநிதி சதாசிவம் சிறிதரன் தெரிவித்தார்.**

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சீரமைக்கப்பட்டு, தரமுயர்த்தப்பட்ட குழந்தைகள் விடுதி மற்றும் உள்ளக மருத்துவ பட்டதாரிகளின் தங்குமிட விடுதி என்பன நேற்றுமுன்தினம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவ கலாநிதி சதாசிவம் சிறிதரனால், திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது;

வலிகாமம் வடக்கு போரால், மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசம். தற்போது குறித்த பகுதி மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டு மக்கள் குடியமர்ந்து வருகின்றனர். இங்குள்ள மக்களுக்கு பல்வேறு மருந்துத் தேவைகள் காணப்படுகின்றன. மீள்குடியேற்றப் பகுதியில் அதிகளவான சிறுவர்கள் உள்ளனர். இங்குள்ள சிறுவர் மற்றும் குழந்தைகளுக்கான சிறந்த மருத்துவ சேவையைப் பெற்றுக்கொடுக்க முடியும். விடுதி திறக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் உள்ளக மருத்துவர்கள் அதிகளவானோர் உள்வாங்கப்படுவார்கள். இதனால் மருத்துவர்களின் பற்றாக்குறையை வெகுவிரைவில் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்றார்.

மருத்துவ அத்தியட்சகர் ஆர்.பி.ஜீ. விமலசேன மற்றும் குழந்தை மருத்துவ நிபுணர் சிவலிங்கம் ஜெயபாலனின் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடை பெற்றன. (ஐ-25)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கொடிகாமம்,செப்.27

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் கலாசார சீர்கேடு மற்றும் மது ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் அல்லாரை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி லில்லிமலர் அற்புதநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் மதுவரி திணைக்கள மதுவரி அத்தியட்சகர் நா.கிருபாகரன், சாவகச்சேரி மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி எம்.வி.ஐ.என் பியசாந்த மற்றும் கோப்ரல் ஆர்.இந்திரபால, கொடிகாமம் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் பியசேன உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இக் கருத்தமர்வின் போது கிராமத்தில் இருக்கும் பிரச்சினைகள் யாவை அவற்றை எவ்வாறு தீர்ப்பது போதைப் பொருள் மற்றும் மது பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள், அவற்றை எவ்வாறு தீர்ப்பது போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (ஐ-159)

## தனிமைப்படுத்தல் நிறைவு: 63 பேர் வீடு திரும்பினர்

கிளிநொச்சி, செப்.27

கொரோனாத் தொற்றுக் காரணமாக இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 63 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடு களுக்குத் திரும்பியுள்ளனர்.

மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது எவருக்கும் தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து நேற்று அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று கொரோனாத் தடுப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ-இ)



### பாடசாலைகளுக்கு

## விழிப்புணர்வு பதாகைகள்

வவுனியா,செப்.27

கொரோனாத் தொற்றில் இருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் பாடசாலைகளுக்கு விழிப்புணர்வுப் பதாகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளையின் ஏற்பாட்டில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக செட்டிகுளம் கோட்டத்துக்கு உட்பட்ட செட்டிகுளம் மகாவித்தியாலயம் மற்றும் அல் இக்பால் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு இந்த விழிப்புணர்வுப் பதாகைகள் நேற்று கையளிக்கப்பட்டன. (ஐ-18)

## புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா

கொழும்புத்துறை,செப்.27

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடை பெற்று வருகின்றன.

ஒக்ரோபர் 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.15 மணிக்கு நற்கருணைப் பெருவிழா நடைபெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாண ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டு, ஆலய முன்றிலில் திருச்சொருப பவனியும் இடம் பெறவுள்ளதாக பங்குத் தந்தை அருட்பணி ஜே.நீக்லஸ் அடிகள் தெரிவித்துள்ளார். (ஐ

### நடப்பாண்டுக்கான

## கரித்தாஸ்-கியூடெக் நிறுவன செயற்றிட்டங்கள் காவலூரில்

யாழ்ப்பாணம், செப்.27

யாழ்ப்பாணம் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் 'வறுமைக்கான காரணங்களைக் கவனத்தில் கொள்ளலும், விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும்' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டுக்கான செயற்பாடுகள் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாடுகளில், 13 கிராம அலுவலர் பிரிவின் 570 குடும்பங்களைச் சேர்ந்த வீட்டுத்தோட்டப் பயனாளிகளும், 27 முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்கள் மற்றும் அவர்களின் பெற்றோரும், 4 பாடசாலைகளைச் சேர்ந்த 1034 மாணவர்களும் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகளாக வீட்டுத்தோட்டம் செய்யும் குடும்பங்களுக்கு விதைகள், விவசாய உபகரணங்கள் மற்றும் வீட்டுத்தோட்ட விவசாயச் செய்முறைக் கையேடுகள் என்பன வழங்கப்பட்டன.

முன்பள்ளிச் சிறார்களுக்கு போசாக்கு சத்துணவும், அவர்களின் பெற்றோருக்கு வீட்டுத் தோட்டத்துக்கான விதைகளும் வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை மாதிரித் தோட்டம் அமைப்பதற்கு விதைகள், செய்முறைக் கையேடுகள் மற்றும் தோட்டம் அமைப்பதற்கான உபகரணத் தொகுதிகளும் வழங்கப்பட்டன.

செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்வதற்காக தேசிய கரித்தாஸ் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் திருமதி நிலானி திசேரா, தமிழ் மறை மாவட்டங்களின் இணைப்பாளர் நிசாந் ஆகியோர் வருகை தந்து கடந்த 22,23ஆம் திகதிகளில் கள ஆய்வை மேற்கொண்டிருந்தனர். (ஐ)

## திறன்வகுப்பறை திறப்பு



வயாவிளான்,செப்.27

வயாவிளான் மத்திய கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு ஐந்தாவது திறன் வகுப்பறை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகனால் திறக்கப்பட்டது.

பாடசாலையின் 1984 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மற்றும் 1987 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர மாணவர்களால் இந்த திறன் வகுப்பறை அமைக்கப் பட்டது என தெரிவிக்கப் பட்டது. (ஐ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தாமரையில்தான் தமிழீழம் மலரும்

தாமரையில்தான் தமிழீழம் மலரப்போகின்றது இவ்வாறு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன் தெரிவித்திருந்தார். மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுனவின் இலச்சினை தாமரை மொட்டு. இதைக் குறிக்கும் வகையிலேயே இரா.சம்பந்தன் அவ்வாறு தெரிவித்திருந்தார். அவரின் யாதார்த்தபூர்வமான இந்தக் கருத்து தற்போது படிப் படியாக மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றது.

தமிழர்களுக்காகவும் அவர்களின் விடிவுக்காகவும் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, உணவாகாரம் நீராகாரம் அருந்தாது 12 நாள்கள் யாகம் நடத்தி ஆகுதியானது ஊரெழுவின் உயிர். அந்த உன்னதனை நினைந்துருகும் நாள்களில் இந்த வருடம் ஒன்றல்ல இரண்டல்ல ஏகப்பட்ட கெடுபிடிகள், அழுத்தங்கள், நெருக்குவாரங்கள்.

திலீபனை அஞ்சலிக்கத் தடைகோரிய பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றங்களால் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டது. பயங்கரவாதம் - கொரோனா பெருந்தொற்று - பொது அமைதிக்குப் பங்கம் ஆகிய விடயதானங்களின் கீழ் இந்தத் தடைகள் விதிக்கப்பட்டன. மேன்முறையீடுகளும் தோற்றுப் போயின. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் உணவொறுப்புப் போராட்டம் நேற்று நடைபெறும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக இணைந்து அறிவித்தன. அந்த அறவழி நகர்வுக்கும் அனுமதி கிட்டவில்லை. இதையடுத்து நீதிமன்றத் தீர்ப்பை மீறாத வகையில் பொதுஅமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில் சாவகச்சேரி சிவன் கோயில் வளாகத்தில் உணவொறுப்புப் போராட்டம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றுபடுதலால் பெரும் எழுச்சியுடன் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள திலீபனின் நினைவிடத்தில்கூட இதைத்தான் செய்வதற்கு எம்மவர்கள் திட்டமிட்டிருந்தனர். அது பிறிதொரு இடத்தில் இடம்பெற்றுள்ளது. அவ்வளவுதான் வேறுபாடு. மற்றும்படி அஞ்சலிப்பு அஞ்சலிப்புத்தான். இதில் பொது அமைதிக்கு எங்கு பங்கம் ஏற்பட்டுள்ளது என்பதையும் தமது ஏனைய குற்றச்சாட்டுக்களின் நியாயப்பாடுகளையும் பொலிஸார்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

தடைகள் இருந்தால்தான் நீரோட்டத்தின் வேகம் அதிகரிக்கும் என்று சொல்வார்கள். அதுபோன்றுதான் இம்முறை தியாகத்துக்கான அஞ்சலிப்பும் அமைந்திருக்கின்றது. தடைகள் ஏதும் விதிக்கப்படாமல் கெடுபிடிகள் இல்லாமல் இருந்திருந்தால் நல்லாட்சிக் காலத்தில் இடம்பெற்ற அஞ்சலிப்புக்களைப் போன்று உப்புச்சப்பற்ற முறையில் இந்த விடயம் முடிந்திருக்கும். ஆனால் கோத்தாபய தலைமையிலான அரசின் நெருக்குவாரங்களாலும் தடைகளாலும்தான் அஞ்சலிப்பு வழக்கத்துக்கு மாறாக இம்முறை உணர்வு பூர்வமாக பேரெழுச்சி பெற்றது. தமிழர் தாயகம் கொதிநிலைக்குச் சென்றது. தியாகத்தின் திருவுருவமான திலீபன் மீதான பற்றும் தேடலும் இளைஞர்களுக்கு இரட்டிப்பானது. அனைத்துக்கும் மேலாக எவருமே எதிர்பாராத வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் திரண்டன.

திலீபனின் தியாக வேள்வி எதற்காக இடம்பெற்றது? ஏன் இடம்பெற்றது? என்று எதிர்காலத்துக்குப் பறைசாற்ற தமிழர்களோ தமிழ்த் தேசியக் கட்சிகளோ தேவையில்லை. கோத்தாபய தலைமையிலான அரசும் அதன் கொள்கைகளுமே போதும். சம்பந்தர் சொன்னதுபோல தாமரையில்தான் தமீழீழம் மலரப்போகின்றதோ என்னமோ!

# '20' நிறைவேறியதும் ஜனநாயகத்துக்கு முடிவு

## சந்திரிக்கா ஆவேசம்



**கொழும்பு,செப்.27**

**அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவு படுபயங்கரமானதாகும். '20' நிறைவேறியதும் ஜனநாயகத்துக்கும் முடிவு கட்டப்பட்டுவிடும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகத் தலைவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 61 ஆவது நினைவுதின நிகழ்வு, அத்தனகலவிலுள்ள அன்னாரின் சமாதியில் நேற்று நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, உப தலைவர் நிமல் சிறிபாலடி சில்வா, முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

நினைவுதின நிகழ்வு முடிவடைந்த பின்னர் '20' தொடர்பில் சந்திரிகா அம்மையாரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்,

20 ஆவது திருத்தச்சட்ட வரைவு படுபயங்கரமானதாகும். ஜனநாயகம் முடிந்துவிடும். அது தொடர்பில்.ெ விரைவில் அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளேன்- என்றார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பது குடும்பச் சொத்துக் கிடையாது, அது மக்களுக்கான கட்சியாகும். எனவே, அதனை ஆக்கிரமித்து வைக்கும் எண்ணம் எமக்கு இருக்கவில்லை. அதனால் தான் புதிய தலைவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனாலும் கட்சியை இன்று சின்னபின்னமாக்கிவிட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(க-44)

# மாகந்துரே மதூஸிடம் பணம் பெற்ற அதிகாரி

கொழும்பு,செப்.27

பாதாள உலகக்குழு முக்கியஸ்தரான மாகந்துரே மதூஸ் டுபாயில் இருந்த போது, அவரிடம் இலங்கையின் சிறைச்சாலைகள் ஆணையாளர்களில் ஒருவர் பணம் பெற்றுள்ளார்.

இந்த விடயத்தை சிறை வைக்கப்பட்டுள்ள மற்றுமொரு பாதாள உலகக்குழு முக்கியஸ்தரான கொஸ்கொட தாரக தெரிவித்துள்ளார்.

அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று மேலதிக மன்றாடியார் நாயகம் திலீப பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காலி நீதிவான் நீதிமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட வழக்கு விசாரணையின் போது, இந்தத் தகவல் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# குறைவடையும் சிறுவர் துஷ்பிரயோகம்

கொழும்பு,செப்.27

நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறைவடைந்து வருகின்றன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

2019 ஆண்டு நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 8 ஆயிரத்து 558 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு முதல் ஏழரை மாதங்களில் 4 ஆயிரத்து 484 முறைப்பாடு கள் மாத்திரம் முன்வைக்கப்பட்டு ள்ளன என்றும் அவர் குறிப்பி ட்டுள்ளனர். (க-இ)

# ஆதரவு வழங்கினாலும் அரசுடன் இணையவிடோம்

## செஹான் சேமசிங்க உறுதி

கொழும்பு,செப்.27

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு எதிர்தரப்பு உறுப்பினர்கள் சிலர் ஆதரவு வழங்குவார்கள். ஆதரவு வழங்குவதால், அவர்களை அரசில் ஒரு போதும் இணைத்துக் கொள்ள மாட்டோம். திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான பெரும்பான்மைப் பலம் ஆளும் தரப்பினரிடம் உள்ளது.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

இல்லாத காரணிகளைக் குறிப்பிட்டு, எதிர்த்தரப்பினர் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை எதிர்க்கின்றனர்.

நல்லாட்சி அரசில் நாடாளுமன்ற ஜனநாயகம், ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை எனக் குறிப்பிட்டு, அரசு மறைமுக அரசியல் பழிவாங்கல்களைக் கொண்டு, அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தது.

திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளைத் திருத்த, அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை ஒரு வார காலத்துக்குள் கொண்டுவருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்தார்.

நல்லாட்சி அரசில் ஜனாதிபதி பதவி வகித்த போது, நாடாளுமன்றத்துக்கு வந்து எதிர்த்தரப்பின் உறுப்பினர்களிடம் தனிப்பட்ட முறையில் அவர் வாக்குறுதி வழங்கினார்.

20 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு வாரத்துக்குள் அல்ல 5 வருட பதவிக் காலத்திலும் நிறைவேற்றவில்லை.

ராஜபக் ஷர்களை இலக்குப்படுத்திக் கொண்டு வரப்பட்ட, 19 ஆவது திருத்தம் நல்லாட்சிக்கு சாபக்கேடாக அமைந்தது என்பதை அவரே ஏற்றுக் கொண்டார். கடந்த அரசில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கு இடையில் அதிகார முரண்பாடுகள் ஏற்பட்டன. இதன் விளைவை நாட்டு மக்களே இறுதியில் அனுபவித்தனர் - என்றார். (க-இ)

### பொதுமக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட

# வீரபுரம் கூட்டுறவு சங்கக் கட்டடம்

## 5 ஆண்டுகளாக தேடுவாரற்ற நிலையில்!

வவுனியா, செப்.27

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட வீரபுரம் பகுதியில் பொது மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கடந்த 5வருடங்களுக்கு மேலாக பாவனையற்று பற்றைக்காடாகக் காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல மில்லின் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு, மேல் கூரைகள் பழுதடைந்து காணப்படுகின்றன. தற்போது பற்றைகளால் சூழப்பட்ட அந்தக் கட்டடம் கால்நடைகளின் வசிப்பிடமாக மாற்றமடைந்துள்ளதோடு, அங்கு சட்டவிரோதச் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வவுனியாவில் பலர் சொந்த வீடுகளின்றி இருக்கும் நிலையில், மக்களுடைய வரிப்பணத்தில் கட்டப்பட்ட கட்டடமொன்று இவ்வாறு பராமரிப்பின்றிக் காணப்படுவது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.



அத்தோடு, உரிய அதிகாரிகள் இக் கட்டடம் தொடர்பில் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு மக்களுக்கு நியாயமான விலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் நிறுவுமாறு ஊரவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ப-18)

## சாரதிகள் ஏழுவருக்கு ரூ. 20,7000 தண்டம்

சாவகச்சேரி. செப். 27

போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வகையில் வாகனம் செலுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம். 2 லட்சத்து 7 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மதுபோதையில் வாகனம் செலுத்தியோர், மதுபோதையில் சாரதிய அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியோர், மதுபோதையில் வாகன வரிப் பத்திரமின்றி, தலைக்கவசம் அணியாமல் வாகனம் செலுத்தியோர் என ஏழு சாரதிகளுக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சாரதிகளுக்கு தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)



### கிளி. மாவட்டச் செயலகத்தில்

## அரசபணியாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை

கிளிநொச்சி, செப்.27

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் 50 உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் மாதிரிகள் பெறப்பட்டன. பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தி மாவட்டச் செயலகத்திற்கு அன்றாடம் கடமைக்குச் சமுகமளிக்கும் 50 உத்தியோகத்தர்களுக்கே முதற்கட்டமாக இந்தப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி எஸ். சுவேந்திரனுடன் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

(ப-222)

## டக்ளஸை சந்தித்தார் மாலைதீவின் தூதுவர்

கொழும்பு, செப்.27

மாலைதீவின் இலங்கைக்கான தூதுவர் ஓமர் அப்துல் ரசாக்குக்கும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்திப்பின்போது மாலைதீவின் கடலுணவு மற்றும் கடலுணவுசார் உற்பத்திகளுக்கு இலங்கையில் சிறந்த வரவேற்புக் காணப்படுகின்ற நிலையில், கொரோனா காரணமாக அண்மைக் காலமாக குறித்த இறக்குமதிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக கவலை வெளியிட்ட மாலைதீவுத் தூதுவர்,அந்தத் தடையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அண்மைக்காலமாக இலங்கையில் கடற்றொழில் செயற்பாடுகள், மீன்பிடி இறங்குதுறைகள் விவரங்கள் மற்றும் நீர்வேளாண்மை முன்னேற்றங்கள் தொடர்பாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி. இந்து ரத்னாயக்க விடம் மாலைதீவுத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, கடற்றொழில்சார் மற்றும் நீர்வேளாண்மை தொடர்பான விடயங்களில் மாலைதீவுடன் தொழில்நுட்ப, அறிவுசார் அனுபவங்களை இலங்கை பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கின்றது எனத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எல்லை தாண்டுகின்ற சந்தர்ப்பங்களில் மாலைதீவில் கைதுசெய்யப்படுகின்ற இலங்கை கடற்றொழிலாளர் விவகாரத்தை இருதரப்பு ஒப்பந்தம் ஒன்றின் ஊடாகக் கையாள வேண்டும் எனவும் தெரிவித்தார். (ப-இ)



பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 5 மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம் பாடசாலை அதிபர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது முகாமுக்கான வளவாளர்களாக முகமாலை றோ.க. வித்தியாலய அதிபர் ம.பிரதீபன், பளை மத்திய கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசிரியர் திருமதி. வி.சஜீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-159)

### ஆதன வரி;

## 2 வட்டாரங்களில் கலந்துரையாடல்

கிளிநொச்சிம செப். 27

கனகாம்பிகைக்குளம், திருவையாறு வட்டாரங்களில் ஆதனவரி அமுலாக்கல் அளவீடு தொடர்பிலான மக்களின் கருத்துக்களைக் கேட்டு அறிவதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் கரைச்சிப் பிரதேச சபையின் மண்டபத்தில் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

மக்கள் செலுத்தும் ஆதன வரி பிரதேசங்களின் அபிவிருத்திக்குப் போதுமானது இல்லை என்று கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. அத்தோடு மேற்படி விடயத்தை ஒவ்வொரு குடும்பத்திற்கும் தெளிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டது. சந்திப்பில் வட்டார உறுப்பினர்கள், சபையின் செயலாளர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

ஆதன வரி தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில் கரைச்சி பிரதேச சபை மக்களுக்கு தெளிவுபடுத்தும் செயற்றிட்டத்தையும், பாரதிபுரம் மற்றும் கிருஷ்ணபுரம் பகுதிகளில் ஆரம்பித்துள்ளது. (ப-6)

## எழுதுமட்டுவாழில் பி.சி.ஆர்.சோதனை

சாவகச்சேரி, செப் 27

எழுதுமட்டுவாழில் உள்ள டோக்கியோ சிமெந்துக் கலவை அலகில் பணியாற்றுவோருக்கு எழுந்தமான கொரோனா தொற்றுபி.சி.ஆர்பரிசோதனைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டன. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் இப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். சுகாதார மருத்துவ அதிகாரியின் நேரடிக் கண்காணிப்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியினால் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்த பிரதேசத்தில் உள்ள மக்கள் குடியிருப்பு உள்ள பகுதிகளில் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதன்படி இது வரை நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி, மட்டுவில் போன்ற இடங்களிலும் தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை, கைதடி ஆயுள்வேத மருத்துவமனை, வரணி மகா வீதி நிர்மாணப் பணியகம் என்பவற்றில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ப-9)

# திலீபனும் புலியே!

## நினைவேந்தலுக்கு இனியும் இடமில்லை

*அரசு திட்டவட்டம்*



**கொழும்பு, செப். 27**

**“திலீபனும் புலிதான். எனவே, புலிகளுக்கு நினைவேந்தல் நடத்துவதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படாது. சம்பந்தன், கஜேந்திரன், விக்னேஸ்வரன் ஆகியோர் தமிழ் மக்களை தவறாக வழிநடத்துகின்றனர். மீண்டுமொரு போருக்கு மக்களைத் தூண்டுகின்றனர்.” என்று இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

தியாக திலீபனுக்கு நினைவேந்தல் நடத்துவதற்கான உரிமை வேண்டும் என வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் தொடர்பில் நேற்று உதயனிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் சரத் வீரசேகர மேலும் கூறியவை வருமாறு,

“புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தியாகிகள் அல்லர், அவர்கள் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள், இதன் காரணமாகவே 32 நாடுகள் அந்த அமைப்புக்கு தடைவிதித்துள்ளன. அந்த அமைப்பின் உறுப்பினரே திலீபன். எனவே, புலிகளுக்கு நினைவேந்தல் நடத்துவதற்கே போராட்டத்தில் ஈடுபடும் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் முயற்சிக்கின்றனர். தமிழ் மக்களை தவறாக வழிநடத்துவதற்காகவே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். 2002 உடன்படிக்கை காலப்பகுதியில் நான் வடக்கு ‘கொமாண்டராக’ பணியாற்றினேன். புலிகள் அமைப்பால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டுள்ளேன். தமிழ் இளைஞர்களை புலிகள் கொண்டுசெல்லும்போது நானே காப்பாற்றினேன். தமிழ் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் பாதுகாப்பு வழங்கி அவர்களைப் பாதுகாத்தோம்.

இறுதிக்கட்டப்போரின்போது தமிழ் மக்களை புலிகள் பணயக்கைதிகளாக வைத்திருந்தனர். அவர்களையும் நாமே மீட்டெடுத்தோம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் எங்கிருந்தனர்? கடத்தல், கப்பம் என தமிழ் மக்களுக்கு எதிராக அநீதி இழைத்தவர்களுக்கு நினைவேந்தல் நடத்துவதற்கு உரிமைகோருவது தமிழ் மக்களை அவமதிக்கும் செயலாகும். நான் தமிழ் மக்களை நேசிக்கின்றேன். இனவாதம் பேசவில்லை. உண்மையைத்தான் கதைக்கின்றேன். வடக்கில் உள்ளவர்களுக்கு குருதி தேவைப்படும்போது எமது படையினர்தான் வழங்குகின்றனர், கூட்டமைப்பினர் கொழும்பில் இருப்பார்கள். அதேவேளை, மீண்டுமொரு போர் வந்தால் யாருக்கு பாதிப்பு? போர்க்கால துன்பங்கள் எப்படியிருக்கும் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். தீலிபன் போன்றவங்களை நினைவுகூர்ந்து போருக்கு செல்வதா அல்லது சமாதானமாக வாழ்வதா என கட்சிகளிடம் மக்கள் கேட்கவேண்டும்.” என்றார்.(து-44)

# மாகாணசபை முறையை நீக்குவது பற்றி பேச்சில்லை!

*நீதி அமைச்சர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, செப். 27

மாகாணசபை முறைமையை நீக்குவது தொடர்பில் தற்போதைய சூழ்நிலையில் அரசுக்குள் எவ்வித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

“மாகாணசபை முறைமை நீக்கப்படவேண்டும் என இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்துகின்றார். அதேபோல் இந்த முறைமையை நீக்குவதற்கு சூழ்ச்சி நடப்பதாக ஆளுங்கட்சிக்குள்ளேயே கருத்து வெளியிடப்படுகின்றது. அவ்வாறான ஏற்பாடு உள்ளதா, பேச்சு நடைபெறுகின்றதா” என எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

“19 மற்றும் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பிலேயே தற்போது கலந்துரையாடல் இடம்பெறுகின்றது. மாகாணசபை குறித்து பேச்சு நடத்தப்படவில்லை. அரசுக்குள் இருப்பவர்கள் பலகோணங்களில் கருத்துகளை வெளியிடக்கூடும். அது அவர்களுக்கான ஜனநாயக உரிமை. எனவே, மாறுபட்ட கருத்துகள் வருவது பிரச்சினை அல்ல.” என்றும் அவர் கூறினார். அத்துடன், அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைபை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைபலம் கிடைக்கும் என நான் நம்புகின்றேன். ‘20’ என்பது தனி நபரை இலக்கு வைத்துக் கொண்டுவரப்பட்டது அல்ல. என்றும் குறிப்பிட்டார். (து-44)

# ‘பொன்மாலைப் பொழுது’ நண்பகலில் நல்லடக்கம்

சென்னை, செப். 27

ரசிகர்கள், பொதுமக்கள் கண்ணீர் மல்க பொலிஸாரின் 72 குண்டுகள் அரச மரியாதையுடன் முழங்க பிரபல பாடகர் எஸ்.பி.பி.யின் உடல் தாமரைப்பாகத்தில் உள்ள அவரது பண்ணைவீட்டில் நேற்று நண்பகல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்தியத் திரையுலகின் முன்னணிப் பாடகரான எஸ்.பி.பாலசுப்பிரமணியம் கொரோனாத் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து கடந்த ஓகஸ்ட் 5ஆம் திகதி சென்னை எம்ஜிஎம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தொடர் சிகிச்சை காரணமாக கடந்த 4ஆம் திகதி அவர் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தார்.

கொரோனாத் தொற்று நீங்கினாலும், நுரையீரல் தொற்று அதிகரித்துக் கொண்டே இருந்தது. மூளையில் ஏற்பட்ட குருதிக்கசிவால் உறுப்புகளின் செயல்பாடு குறைந்து உடல்நிலை மேலும் மோசமடையத் தொடங்கியது. இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் நண்பகல் 1.04 மணிக்கு எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உயிர்பிரிந்தது.

அவரின் சடலம் அனைவரினதும் கண்ணீர் அஞ்சலிக்கு இடையே நேற்று நண்பகல் அடக்கம் செய்யப்பட்டது. (ம-இ)





# தாஜுதீனின் கொலைவழக்கினை முடிவுக்கு கொண்டுவந்தது மன்று!

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை வழக்கின் முதன்மைச் சந்தேக நபர் உயிரிழந்த நிலையில் அந்த வழக்கை மேலும் தொடர முடியாது எனக் கட்டளை வழங்கிய கொழும்பு மேல் நீதிமன்றம், வழக்கை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.

இந்த வழக்கின் முக்கிய சாட்சியங்களை மறைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட முதன்மைச் சந்தேக நபரான சட்ட மருத்துவ வல்லுநர், பேராசிரியர் ஆனந்த சமரசேகர உயிரிழந்ததை அடுத்தே வழக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தக் கட்டளையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுளா திலகரத்ன நேற்று வெள்ளிக்கிழமை வழங்கினார். மைத்திரி - ரணில் கூட்டு ஆட்சியில் வசீம் தாஜுதீனின் சடலம் பரபரப்பாக மீளத் தோண்டியெடுக்கப்பட்டு உயிரிழப்புக்கான காரணம் விபத்தில்லை, கொலையென அறிவிக்கப்பட்டிருந்தது. இதேவேளை, இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில், ஆயிரத்து 200 பேரிடம் வாக்குமூல்ம் பெற்றுக்கொள்ளப்பட்டது. 22 இலட்சம் தொலைபேசி அழைப்புகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சூரிய நிறுவகத்தின் சிங்கள கற்கைநெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுதுமலை குபேரமஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சூரிய நிறுவகத்தின் இணைப்பாளரும் ஆசிரியருமான தேவராசா பிறேமராஜா தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக சூரிய நிறுவகத்தின் இயக்குநர் கமல் சிறிவர்த்தன கலந்துகொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

# 13 அங்குல தேங்காயை 70 ரூபாவுக்கு விற்கவும்

*வர்த்தமானியில் அறிவிப்பு*

கொழும்பு, செப். 27

தேங்காய் ஒன்றுக்கான அதியுச்ச நிர்ணய விலையை அறிவித்து நுகர்வோர் விவகார அதிகார சபை வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய 13 அங்குலத்துக்கும் கூடிய தேங்காயை 70 ரூபாவுக்கும், 12 முதல் 13 அங்குலம் வரையான தேங்காயை 65 ரூபாவுக்கும், 12 அங்குலத்துக்கும் குறைவான தேங்காயை 60 ரூபாவுக்கும் விற்பனை செய்ய வேண்டும் என்று அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து-இ)

# மட்டக்களப்பில் மீட்கப்பட்டன 2 துப்பாக்கிகள்

மட்டக்களப்பு, செப். 27

மட்டக்களப்பு - வாழைச்சேனை மற்றும் களுவாஞ்சிக்குடி பகுதிகளில் துப்பாக்கிகள் இரண்டு மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை - மீறாவோடைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது பற்றைக்காட்டிலிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்ட துப்பாக்கி, வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களுவாஞ்சிக்குடி பகுதியிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட துப்பாக்கி கொக்கட்டிச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்பட்டவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-இ)

# இராஜதந்திரிகளுக்கு பி.சி.ஆர். கட்டாயம்

## கோருகின்றது பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

**கொழும்பு, செப். 27**

**இலங்கைக்கு வரும் இராஜதந்திரிகளுக்கு விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும் எனப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



தற்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். சோதனைக்கு பதிலாக அந்தந்த நாட்டில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவை இராஜதந்திரிகள் சமர்ப்பிக்க முடியும் என்ற நடைமுறை காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், பி.சி.ஆர். பரிசோதனைகளை இராஜதந்திரிகளுக்கு கட்டாயமாக்குவது குறித்து சுகாதார அமைச்சுக்கு தகவல் வழங்கியுள்ளோம் என்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள சட்டங்கள் அனைவராலும் பயன்படுத்தப்பட வேண்டும். ஆகவே இராஜதந்திரிகளும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என அறிவிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஒரு இராஜதந்திரி சமர்ப்பித்த பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவு ஏழு நாள்களுக்குச் செல்லுபடியாகும். ஆனால் 7 முதல் 10 ஆம் நாள் வரை மற்றொரு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர்கள் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

(த-இ)

# எம்.பி க்களின் அலுவலகங்களாக வாடகை வீடுகள்?

கொழும்பு, செப். 27

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ வீடுகளுக்கான பிரச்சினைக்கு தீர்வாக தற்காலிகமாக வாடகை வீடுகளை பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராஜகிரியவிலுள்ள மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கான பயிற்சி நிலையத்தின் ஒரு பகுதியை வாடகை அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்ட நாடாளுமன்றத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

மூன்று மாதங்களுக்கு மாத்திரம் குறித்த கட்டடத்திலுள்ள விடுதிகளை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு உள்ள இயலுமை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் 120 மாத்திரமே காணப்படுகின்றன. அவற்றில் 100 வீடுகள் தற்போதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் காணப்படும் உத்தியோகபூர்வ இல்லங்களை மீளக் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், 35 பேர் மாத்திரமே தற்போது வீடுகளை மீளக் கையளித்துள்ளனர்.

இந்த நிலையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வீடுகளை மீளக் கையளிக்காமையால், இந்தமுறை புதிதாக தெரிவாகியுள்ள உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களைப் பெற்றுக்கொடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சில வீடுகளை சீரமைக்க வேண்டியுள்ளது எனவும் நாடாளுமன்றத்தின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, இதுவரை உத்தியோகபூர்வ இல்லங்களைக் கையளிக்காதவர்களின் பெயர் விவரங்களைப் பகிரங்கப்படுத்துவது தொடர்பிலும் நேற்றைய கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

*போக்குவரத்து விதிகளை மீறிய*

# ஆயிரத்து 200 சாரதிகளை அள்ளிச் சென்றது பொலிஸ்

கொழும்பு, செப். 27

கொழும்பு நகரில் போக்குவரத்துச் சட்டவிதிமுறைகளை மீறி செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் ஆயிரத்து 200 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சாரதிகள் பொலிஸ் தலைமையகத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பஸ் முன்னுரிமைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் போக்குவரத்துச் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் இந்த சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கையூடாக இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் போக்குவரத்து பிரிவின் கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் இந்திக அப்புகொட மேலும் தெரிவித்தார்.

(த-இ)



# பாலசுப்ரமணியத்துக்கு வவுனியாவில் அஞ்சலி

வவுனியா, செப். 27

மறைந்த பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்துக்கு வவுனியாவில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் சென்னையில் நேற்றுமுன்தினம் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார்.

அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வவுனியாவில் பல்வேறு இடங்களில் நேற்று அஞ்சலி பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக குருமன்காட்டுச்சந்தி, நகர முச்சக்கர வண்டி தரிப்பிடம், சந்தை மற்றும் வவுனியா நகர் போன்ற பகுதிகளில் பல்வேறு தரப்பினர் அஞ்சலி பதாகைகளை வைத்துள்ளனர். (த-18)

# குவைத் தூதரகத்துக்கு பூட்டு

கொழும்பு,செப்.27

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று ஊழியர்கள் உட்பட 40 க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதியானதை அடுத்து, குவைத்தில் உள்ள இலங்கை தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் 11 ஆம் திகதி வரை தூதரகம் மூடப்படுகின்றது என்று குவைத்தில் உள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 44 பேர் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் என்றும் குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (க-இ)

# முல்லை.ஊடகவியலாளர்களுக்கு இடையூறாக புலனாய்வாளர்கள்

முல்லைத்தீவு, செப். 27

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில், ஊடகவியலாளர்களுக்கு இடையூறாக புலனாய்வாளர்கள் செயற்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவிலில், திலீபன் நினைவேந்தல் தினமான நேற்று உணவு ஒறுப்புப் போராட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டவர்கள் ஊடகங்களிடம் கருத்துச் சொல்ல முற்பட்டபோது, புலனாய்வாளர்களும் ஊடகவியலாளர்களுக்கு அருகில்வந்து ஒளிப்பதிவுசெய்ய முற்பட்டனர். அதனால் கருத்துக் கூற முற்பட்டவர்கள் கருத்துக்கூறப் பின்னடித்தனர். ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்கும்போது, கருத்துக்கூறும்போது தங்களுக்கு இடையூறாக நீங்களும் ஒலி, ஒளிப்பதிவுசெய்து இடையூறு செய்யாதீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கூறினர். எனினும், புலனாய்வாளர்கள் அதைக் கவனத்தில் எடுக்காது ஊடகவியலாளர்களுக்கு இடையூறாகவே செயற்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.


(த-246)

# மணிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகத்தின் மணி விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நீராவியடி இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ)



# இன்றைய நாள்

**மேடம்:** செயல்திறன் கூடும். தொழிலில் அதிக அலைச்சல் இருக்கும். பணியாளர்கள் முன்னேற்றத்தினைக் காண்பீர்கள். வாழ்வில் உயர்ந்த ஒரு நபரின் துணை கிடைக்கும்.

**இடபம்:** பெண்கள் பேச்சைக் குறைக்க வேண்டும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் பற்றிய சிறு கவலை உண்டாகும். ஆடம்பர செலவுகள் குறைந்து சேமிப்பு உயரும்.

**மிதுனம்:** எச்சரிக்கை தேவை. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பணியாளர்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். பணத்தை போராடி வசூலிப்பீர்கள்.

**கடகம்:** பணியாளர்கள் சில யுக்திகளை அறிந்து கொள்வீர்கள். நண்பர்களோடு வீண் விவாதத்தில் ஈடுபடுவதை நிறுத்துவீர்கள். உறவினருடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் தீரும்.

**சிம்மம்:** உற்சாகம் கூடும். நெருங்கியவர்களின் எண்ணங்களை நிறைவேற்று வீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். நீண்ட நாள் பிரார்த்தனையை முடிப்பீர்கள்.

**கன்னி:** நிம்மதி பெருகும். தள்ளிப் போன பயணத்துக்கு ஆயத்தமாகலாம். உறவினர்களிடம் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். பணியாளர்களுக்குப் புதிய வாய்ப்பு வரும்.

**துலாம்:** ஆரோக்கியப் பிரச்னைகளை அலட்சியப்படுத்த வேண்டாம். தம்பதியரிடையே அன்பு அதிகரிக்கும். சிறுசிறு நன்மைகள் உண்டாகும். வியாபாரத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** பணியிட மாற்றம் இப்போதைக்கு சாத்தியம் இல்லை. வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்பட்டாலும் லாபகரமாக முடியும்.

**தனுசு:** குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். கணவருக்காக விட்டுக் கொடுப்பீர்கள் வியப்பூட்டும் செய்தி வரும். சகோதர பாசம் கூடும்.

**மகரம்:** மோதல்கள் அகலும். கட்டடப் பணி தொடரும். மங்கல நிகழ்ச்சிகளுக்கான அறிகுறி தோன்றும். புதிய பணிக்கான முயற்சி வெற்றி பெறும். தீயவர் விலகுவர்.

**கும்பம்:** இளைஞர்களுக்கு குறிக்கோளில் கூடுதல் உறுதி தேவை. உடன்பிறப்புகளால் மருத்துவ செலவுகள் ஏற்படும். பணியாளர்களுக்குக் குழப்பம் ஏற்படும்..

**மீனம்:** அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். கலைத்துறையில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும். குடும்பத்தினருடன் இருந்த மனஸ்தாபம் நீங்கும்.









# வெடுக்குநாறியில் கோலாகலப் பொங்கல்

வவுனியா, செப். 27

வெடுக்குநாறி ஆதி இலிங்கேஸ்வரரின் வருடாந்தப் பொங்கல் விழாவின் இறுதிநாளான நேற்று 108 பானைகள் வைத்து கோலகலமாக பொங்கல் விழா இடம்பெற்றது.

விழாவில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

ஆலய வளாகத்தில் அதிகளவான பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க-110)

# 2 1/2 வருடங்களில் நாடாளுமன்றை கலைக்கலாம்

கொழும்பு, செப். 27

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள ' ஜனாதிபதியால் ஒருவருடத்துக்கு பின் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம்' என்ற சரத்தை மாற்றியமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்றது.

இதன்படி சபை அமர்வு ஆரம்பமாகி இரண்டரை வருடங்கள் முடிவடைந்த பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்கும் வகையில் புதிய ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆளுங்கட்சிகுழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி எம்.பிக்களாலேயே மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்ட பின்னரே 'ஓராண்டு' என்பதை 'இரண்டரை' வருடங்கள் என திருத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போது 20 ஆவது திருத்தச்சட்டவரைவில் சில திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. அப்போது இத்திருத்தமும் உள்ளடக்கப்படும் என ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியால் நான்கரை வருடங்களுக்கு பிறகே நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (து-33)

# 8 நாடுகளுக்கு இராஜதந்திரிகள்

## நாடாளுமன்ற தெரிவுக்குழு சிபார்சு

கொழும்பு, செப். 27

புதிய இராஜதந்திர அதிகாரிகளாக பெயரிடப்பட்டிருந்த 8 பேரின் பெயர்களை அந்தப் பதவிகளுக்கு நியமிக்க உயர் பதவிகள் சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானம் எடுத்துள்ளது.

சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றக் குழு நேற்றுமுன்தினம் நண்பகல் கூடியது. கட்சித் தலைவர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய உயர் பதவிகள் சம்பந்தமான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய சி.ஏ.சந்திர பிரேம ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதியாகவும், எஸ்.அமரசேகர தென்னாபிரிக்காவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராகவும், ஓய்வுபெற்ற அட்மிரல் கே.கே. ஹரிஸ்சந்திர சில்வா ஆப்கானிஸ்தானுக்கான இலங்கை தூதுவராகவும், விஸ்ராமால் சஞ்சீவ் குணசேகர ஜப்பானுக்கான இலங்கையின் தூதுவராகவும், மிலிந்த மொரகொட இந்தியாவுக்கான புதிய இலங்கை உயர் ஸ்தானிகராகவும், ரவிநாத் ஆரியசிங்க அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகவும், பேராசிரியர் செனிகா ஹிரிபுரேகம பிரான்ஸ்சுக்கான இலங்கைத் தூதுவராகவும், கலாநிதி பாலித கொஹன சீனாவுக்கான இலங்கை தூதுவராகவும் நியமிக்கப்படும் வகையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (து-இ)

## மாவட்ட ரீதியில்
# காணி விவகார நீதிமன்றம் அமைப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, செப்.27

மக்கள் மத்தியில் நீண்டகாலமாக காணப்படும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, மாவட்ட அடிப்படையில் காணி விவகார நீதிமன்றத்தை அமைக்கத் தீர்மானித்துள்ளதாகவும், இதற்கான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்ரசேன தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது: பொதுமக்கள் மத்தியில் காணப்படும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு காணி பிரதான காரணியாகவுள்ளது. காணி விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கும் பிணக்குகள் இறுதியில் கொலை மற்றும் பாரதூரமான குற்றச் செயல்களுக்கு கொண்டு செல்லும்.

இதற்கான வழக்கு விசாரணைகள் 25 தொடக்கம் 30 வருட காலம் வரை நீடித்துச் செல்லும். ஆகவே காணி பிரச்சினைகள் தொடர்பிலான விசாரணைகளை 3 மாத காலத்துக்குள் நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாவட்ட மட்டத்தில் காணி விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தை ஸ்தாபிக்க காணி விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த தீர்மானம் தொடர்பான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரச காணிகளில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ள பொது மக்களை பிறிதொரு இடத்தில் குடியமர்த்தி அவர்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான பிரச்சினைகளுக்கு உடனடியாக முரண்பாடற்ற தீர்வுகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன் -என்றார். (ந-இ)

## 20 ஆவது வரைவுக்கு எதிராக மேலும் ஆறு மனுத்தாக்கல்

கொழும்பு, செப்.27

நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 20 ஆவது திருத்த வரைவை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றில் மேலும் ஆறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் இதுவரை 20 ஆவது திருத்த வரைவுக்கு எதிராக மொத்தம் 18 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்கள் மீதான பரிசீலனைகளும், செப்ரெம்பர் 29 ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்த நிலையில் இந்தப் பரிசீலனைக்காக ஐவர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழமொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## மாணவிகள் துஷ்பிரயோகம் ஆசிரியர் மறியலில்!

கொழும்பு, செப்.27

மேலதிக வகுப்புக்குச் சென்ற முதலாம் வகுப்பு மாணவிகள் நால்வரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் (வயது36) கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் ஹம்பாந்தோட்ட, வலஸ்முல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மேலதிக வகுப்புக்குச் சென்ற மாணவிகளில் ஒருவர் தம்மை ஆசிரியர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக தமது பெற்றோருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற பெற்றோர் ஆசிரியரை கடுமையாக தாக்கியதுடன், அந்தப் பகுதியில் கட்டி வைத்துள்ளனர்.

அந்த ஆசிரியரின் கையடக்க தொலைபேசியில், துஷ்பிரயோகம் தொடர்பான காணொலிகள் சிலவற்றையும் பெற்றோர் கண்டுபிடித்துள்ளனர்.

இது அந்த பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து குறித்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டார்.

பெற்றோரினால் கடுமையாகத் தாக்கப்பட்ட ஆசிரியர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவிகள் வைத்தியப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. (ந-இ)

## போலிக் கச்சேரி நடத்தியவர் கைது

மட்டக்களப்பு, செப்.27

மருதானையில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் என்ற பெயரில் போலிக் கச்சேரி ஒன்றை நடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 40 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கு கொரோனாத் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த சான்றிதழ்களும் தயாரிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் கொரோனாத் தனிமைப்படுத்தல் நிறைவுச் சான்றிதழ் முத்திரைகள், நீதிபதிகளின் முத்திரைகள், அதிபர்களின் முத்திரைகள் உட்பட 220 முத்திரைகளைக் கைப்பற்றியுள்ளனர். அதுமட்டுமன்றி 297 வெளிநாட்டுக் கடவுச் சீட்டுகளும் அங்கு கண்டுபிடிக்கப்பட்டன என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ந-இ)

## நியூஸிலாந்து உயர்ஸ்தானிகராக மைக்கல் அப்பிள்டன் நியமனம்

கொழும்பு, செப்.27

இலங்கைக்கான நியூஸிலாந்தின் உயர்ஸ்தானிகராக மைக்கல் அப்பிள்டனை, நியூஸிலாந்து வெளியுறவு அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் நியமித்துள்ளார்.

இலங்கையுடனான நியூஸிலாந்தின் உறவை புதிய நிலைக்கு கொண்டு செல்லும் நோக்கில், நியூஸிலாந்து எதிர்வரும் 2021 ஆம் ஆண்டில் அதன் உயர்ஸ்தானிகராலயத்தைக் கொழும்பில் திறக்கவுள்ளது.

இந்த நிலையிலேயே இலங்கைக்கான நியூஸிலாந்தின் உயர்ஸ்தானிகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு முதல் இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த அப்பிள்டன், தற்போது வெளியுறவு அமைச்சரின் அலுவலகத்தில் மூத்த வெளியுறவு ஆலோசகராகவுள்ளார். (ந-இ)

## உயர் அதிகாரிகளால் பணிக்கு இடையூறு

*வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் முறைப்பாடு*

கொழும்பு, செப்.27

தொழில்துறை அமைச்சில் உள்ள உயர் அதிகாரிகள் தமது பணி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல இடமளிப்பதில்லை என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பணியகத்தில் முகவர்களுடன் தான் நடத்தும் கூட்டங்களை, கூட்டங்களுக்கு வரும் அதிகாரிகள் காணொலியாக பதிவு செய்வதால் அவை தமது பணிக்கு இடையூறாக உள்ளன என அவர் முறைப்பாடு செய்துள்ளார். (ந-இ)

# ரஷ்யப் பிரஜைக்கு கொரோனா இல்லை

## தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தெரிவிப்பு

மாத்தறை, செப்.27

மாத்தறையிலுள்ள விடுதியொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ரஷ்ய பிரஜைக்கு கொரோனாத் தொற்று என்று இனங்காணப்பட்ட நிலையில், தற்போது அவருக்கு தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இறுதியாக மேற்கொண்ட பரிசோதனையின் போதே அவருக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இந்தப் பெறுபேற்றைக் கொண்டு அவருக்கு தொற்று ஏற்படவில்லை என்று கூறமுடியாது. தொடர்ந்தும் அவருக்கு சிகிச்சையளிப்பதோடு தனிமைப்படுத்தி கண்காணிக்க வேண்டியது அவசியமாகும்.

இவர் கடந்த 13 ஆம் திகதி ரஷ்யாவுக்கு சொந்தமான விமானமொன்றில் நாட்டுக்கு வந்துள்ளார். இவருடன் மேலும் 15 பேர் அந்த விமானத்தில் வருகை தந்துள்ளனர். இந்த நபரோடு தொடர்பு வைத்திருந்த சுமார் 150 பேர் வரை தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் - என்றார். (ந-இ)

## இராணுவ சிப்பாய் உயிர் மாய்ப்பு

கொழும்பு, செப்.27

மோதர பகுதியிலுள்ள இராணுவ முகாமில் இராணுவ வீரர் ஒருவர் தன்னைத் தானே சுட்டு உயிர்மாய்த்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 22 வயதுடையவர் எனவும், நொச்சிகாமம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகின்றது.

இவர் உயிர்மாய்த்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-இ)



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று சனிக்கிழமை காலை பக்திபூர்வமாக நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## சுற்றுலா சென்றபோது விபத்து; 8 மாணவர்கள் காயம்

மன்னார், செப். 27

சுற்றுலாவுக்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் கவிழ்ந்ததில் மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரி மாணவர்கள் எட்டு பேர் காயமடைந்தனர்.

குறித்த கல்லூரியில் கற்கும் உயர்தர மாணவர்கள் 30 பேர் குஞ்சுக்குளம் தேக்கம் பகுதிக்கு மூன்று உழவு இயந்திரங்களில் நேற்று சுற்றுலா சென்றுள்ளனர். இதன் போது ஓர் உழவு இயந்திரத்தின் பெட்டி கழன்றதில் தூக்கி வீசப்பட்ட மாணவர்கள் எட்டு பேர் காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். காயமடைந்த மாணவர்கள் உடனடியாக மன்னார் முருங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ-213)

# வட்டக்கச்சியில் விவசாயக் கண்காட்சி

## முதலாம், இரண்டாம் திகதிகளில்

கிளிநொச்சி, செப். 27

**வட்டக்கச்சியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் 1,2ஆம் திகதிகளில் 'தற்சார்பு விவசாய பொருளாதார அபிவிருத்தியை நோக்கி'' என்னும் தொனிப் பொருளிலான விவசாயக் கண்காட்சி நடைபெறவுள்ளது.**

காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இக் கண்காட்சியின் முதல் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மீன்பிடித்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும், இரண்டாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸும் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பிக்கவுள்ளனர்.

கண்காட்சியில் விவசாயத் தகவல் மையம், காளான் செய்கை, தேனீ வளர்ப்பு, வலை வீட்டினுள் பாதுகாப்பான விவசாயம், சூரிய மின்கல சக்தியினூடாக நீர்ப்பம்பிப் பாவனை, மண்ணின்றிய பயிர்ச் செய்கை, அடர்முறையிலான கொய்யாச் செய்கை, மாமரத்தின் கீழ் அன்னாசிப் பயிர்ச்செய்கை, அடர்முறையிலான மாமரச் செய்கை, தரமான பழ உற்பத்திக்கான பயிராக்கவியல் தொழில்நுட்பங்கள், பழமரச் செய்கையில் வினைத் திறனான நிலப்பயன்பாடு, சிறந்த விவசாய நடைமுறைச் செயற்பாடுகள், நெற்செய்கை தொழில்நுட்பங்கள், பண்ணை இயந்திரங்களின் பயன்பாடு, நாற்று மேடை தொழில்நுட்பம், கொள்கலன் பயிர்ச் செய்கை, சேதன தோட்டம், மூலிகைப் பயிர்கள் வினைத்திறனான நிலத்தடி நீர் பாவனைக்கான தொழில்நுட்பம், மலர்ச் செய்கையின் தொழில்நுட்பங்கள், விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் ஆய்வு கூட சேவைகள், தானிய சேமிப்புக் களஞ்சியத்தின் செயற்பாடுகள், பனைசார் உற்பத்திகள் மற்றும் செயற்பாடுகள், நகர்புற வீட்டுத் தோட்டச் செய்கை, வர்த்தக ரீதியிலான கூட்டெரு உற்பத்தி, மறுவயற் பயிர்ச்செய்கை தொழில்நுட்பங்கள், அருகிவரும் பாரம்பரிய பயிர்கள், சுவைச்சரக்கு பயிர்ச் செய்கை (உள்ளி, இஞ்சி, மஞ்சள்) பணப்பயிராகமுருங்கைச்செய்கை, தென்னையின் கீழ் ஊடுபயிர்ச் செய்கை, உள்ளூர் மரக்கறிப் பயிர்ச்செய்கை, வீதிப்பயிர்ச்செய்கை முறையில் மரக்கறிப் பயிர்ச்செய்கை, தரமான கிழங்கு வகைகளின் உற்பத்திக்கான தொழில்நுட்பம் போன்ற பல தலைப்புக்களின் கீழான தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கண்காட்சியில் விற்பனைகளும் இடம்பெறவுள்ளன என்று வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (ஐ)

### அனர்த்தங்களைத் தவிர்க்க

## அகற்றப்படுகின்றன பழமையான மரங்கள்



வவுனியா, செப். 27

கடந்த சில நாள்களாக வவுனியாவில் பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற காரணத்தால், வீதியோரத்திலுள்ள பழமைவாய்ந்த மரங்களை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த மரங்கள் முறிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் அச்சமடைந்த நிலையில் அவை அகற்றப்படுகின்றன.

குருமன்காடு ரயில்வே நிலைய வீதி, ஏ-9 வீதி ஆகிய வீதியோரங்களில் காணப்படும் பழமை வாய்ந்த சில மரங்கள் பட்டுப் போய் உள்ளதுடன் சரிந்து விழும் நிலையில் காணப்பட்டன. அவற்றை அகற்றும் செயற்பாட்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஈடுபட்டுள்ளனர். இலங்கை மின்சார சபையின் பார உயர்த்தி வாகனத்தின் உதவியுடன் அந்த மரங்கள் அகற்றப்படுகின்றன.

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த சில நாள்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் வீதியோர மரம் முறிந்து வீழ்ந்ததில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

## பாலங்கள் சீரமைப்பு

பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியில் உள்ள பாலங்கள் துரித கதியில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. பரந்தன் தொடக்கம் புதுக்குடியிருப்பு வரையான வீதியிலுள்ள கண்டாவளை துவரம் ஆற்றுப்பாலம், தர்மபுரம் நெத்தலியாற்றுப்பாலம், சுதந்திரபுரம் பாலம் மற்றும் கைவேலி மஞ்சள் பாலம் என்பனவே சீரமைக்கப்பட்டு வருகின்றன. (ஐ-ரி1)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கோப்பாய், செப். 27

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பால்பண்ணை பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்தக் குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கோப்பாய் புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது, 26 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 70 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-25)



பளை இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் 4 மாணவர்களின் மாதிரிச் சந்தை அண்மையில் வித்தியாலய வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (ஐ-159)

## விபத்தில் சிக்கி இளைஞன் காயம்

இருபாலை, செப். 27



உழவு இயந்திரமும், மோட்டார் சைக்கிளும் மோதியதில் இளைஞன் ஒருவர் காயமடைந்தார். இந்த விபத்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை முதன்மை வீதி இருபாலை தேவாலயத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

முதன்மை வீதியில் பயணித்த உழவு இயந்திரம், சிறு வீதிக்கு திரும்ப முற்படுகையில், உழவு இயந்திரத்துக்கு பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து, உழவு இயந்திரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கட்டைப்பிராய் பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞன் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

உழவு இயந்திரம் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன், அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-25)

# 20ஆவது திருத்தச் சட்டத்தின் எண்ணக்கருக்கள்: துப்பாக்கிமுனையால் அச்சுறுத்துவதற்கு நிகரானவை

## கொந்தளிக்கிறார் மனுஷ நாணயக்கார எம்.பி.

**கொழும்பு, செப்.27**

**நாடாளுமன்றத்தை ஒரு வருடத்தில் ஜனாதிபதியால் கலைக்கமுடியும் என்ற எண்ணத்தை செயற்படுத்துவது , நாட்டுக்கு நாடாளுமன்றம் ஒன்று தேவையில்லை என்பதையே காட்டுகின்றது. இது நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி துப்பாக்கி முனையால் அச்சுறுத்துவதற்கு நிகரானது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**



எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது,

பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்வாதார பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்ற போதிலும், அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம்தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றார்கள் என்றால் அதில் காணப்படும் சிக்கல்கள் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும்?. இந்நிலையில் 20 திருத்தம் தொடர்பில் தற்போது அரசியல் வாதிகள் மாத்திரமின்றி சிவில் அமைப்புகள், பொதுமக்கள் என பலரும் அவதானம் செலுத்தியுள்ள நிலையில், ஓய்வுபெற்ற சட்டதரணிகளும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

20 திருத்தத்தினால் மக்கள் சர்வாதிகார ஆட்சியை விரும்புகின்றார்களா? என்பதையே பரிசீலனை செய்கின்றனர். இதுவா மக்கள் எதிர்பார்த்த மாற்றம்? கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் முரண்பட்டுக் கொண்டதன் காரணமாகவே நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. தற்போதைய அரசாங்கத்திலும் இத்தகைய சிக்கல்கள் காணப்படுவதன் காரணமாகவா 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை கொண்டுர முயற்சித்து வருகின்றார்கள். அதன் காரணமாகத்தான் 19 ஆவது அரசமைப்பு திருத்தத்திற்கு ஆதரவு வழங்கிய அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் போன்றோரும் இந்த திருத்தத்திற்கு ஆதரவுவழங்குகின்றார்களா? கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஸ்தாபிக்கப்பட்டு வரும் தனிமைப் படுத்தல் நிலையத்தை நடத்துவதற்கு எவன்காட் நிறுவனத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எவன்காட் நிறுவனம் தொடர்பான உரிய வழக்கு விசாரணைகள் எமது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றிருந்தால் , அவர்கள் தற்போது சிறையிலேயே இருந்திருப்பார்கள்.

அதனை செய்யத் தவறியமையின் காரணமாகவே தற்போதைய அரசாங்கம் அவர்களுக்கு இவ்வாறான ஓர் இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது-என்றார். (ந-இ)

# தமிழில் அழைப்பாணை: ஏற்காத சுமனரத்ன தேரர்

### சிங்களத்தில் அனுப்பினாலேயே நீதிமன்றம் செல்வேன் என அழுங்குப்பிடி

மட்டக்களப்பு, செப்.27

தனக்கு எதிராக தமிழில் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது எனவும், இதன் காரணமாக தான் நீதிமன்றம் செல்லப் போவதில்லை எனவும் மட்டக்களப்பு அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் காணொலி ஒன்றைப் பதிவிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் தொல்லியல் திணைக்கள அதிகாரி தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இந்த அழைப்பாணையை நீதிமன்றம் அனுப்பியுள்ளது. இந்த அழைப்பாணை கடிதம் மூன்று தாள்களில் கிடைத்துள்ளது, அது தமிழ் மொழியில் உள்ளதால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை, அதனால் என்னால் நீதிமன்றம் செல்லமுடியாது என கூறி அந்த அழைப்பாணை கடிதத்தைப் பொலிஸாரிடமே திருப்பக் கொடுத்துள்ளார். தனக்குரிய அழைப்பாணை சிங்கள மொழியில்அனுப்பப்பட்டால் மட்டுமே தன்னால் நீதிமன்றம் செல்ல முடியும் எனவும் அந்த காணொலி பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் கிழக்கில் தேரர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை தாக்க முயற்சித்ததுடன், அவர்களை ஒரு கொட்டிலுக்குள் தடுத்து வைத்திருந்தமை தொடர்பான காணொலி வெளிவந்திருந்ததமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)



இலங்கை கடற்படையுடன் இணைந்து

# ஜப்பான் தற்காப்பு படை கப்பல்கள் பயிற்சியில்!

கொழும்பு, செப்.27

ஜப்பான் கரையோர தற்காப்புப் படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் இலங்கை கடற்படையுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டன.

ஜப்பான் கரையோர தற்காப்புப் படைக்குச் சொந்தமான ஜே.எஸ் காஹா மற்றும் ஜே.எஸ் இஹசுசி ஆகிய கப்பல்கள் இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்தக் கடல் குடிவரவை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தி கடற்படையின் பிரதி படைகளின் தலைவர் மற்றும் மேற்கு கடலின் கட்டளைத்தளபதி ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்க, ஜப்பான் கரையோர தற்காப்புப் படையின் காஹா கப்பல் இலச்சினை அதிகாரி ரியர் அட்மிரல் கொன்னோ யசுஷிகே ஆகியோர் கொழும்பு துறைமுகத்தில் சந்தித்தனர். (ந-இ)


# தேரர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி; ஜனாதிபதி கோத்தாபய நடவடிக்கை

கொழும்பு, செப்.27

தேரர்களுக்கு ஆங்கிலம், கணனி மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பவற்றை மேம்படுத்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் ஆசிரியர்களின் நியமனங்கள் , சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் குறித்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு யோசனைகளையும் திட்டங்களையும் முன்வைக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனை விடுத்துள்ளார். இது தொடர்பான பேச்சுவார்த்தை ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதற்கு சகல சமய ரீதியிலான பதிவு செய்யப்பட்ட அறநெறி பாடசாலைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் ராஜாங்க அமைச்சின் பூரண தலையீடு காணப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை கண்டறிந்து அதனை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். (ந-இ)



# திருப்பி அனுப்பப்படவுள்ள கழிவுக் கொள்கலன்கள்

கொழும்பு, செப்.27

கடந்த ஆண்டு பிரித்தானியாவில் இருந்து வந்த கழிவுகள் அடங்கிய 21 கொள்கலன்கள் விரைவில் திருப்பி அனுப்பப்படவுள்ளன என இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜி.வி. ரவிப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொத்தம் 263 கழிவுக் கொள்கலன்கள் இலங்கைக்கு வந்தன. அவற்றில் 130 (40 அடி கொள்கலன்களில்) ஹேலீஸ் குழுமத்தால் அகற்றப்பட்டு கட்டுநாயக்க பகுதியிலுள்ள நிறுவனமொன்றின் வளாகத்தில் வைக்கப்பட்டது. இதன் பின்னர் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக அந்தக் கழிவுகள் 330 கொள்கலன்களில் (20 அடி கொள்கலன்களில்) மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அந்தவகையில் கொழும்பு துறைமுகத்திற்குள் காணப்படும் 133 கொள்கலன்களில் 21 ஐ விரைவில் திருப்பி அனுப்புவோம். கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் விவாதித்து வருகின்றனர்-என்றார் (ந-இ)

# நாட்டைச் சுற்றி தீவிர பாதுகாப்பு வலயங்கள்

கொழும்பு, செப்.27

நாட்டைச் சுற்றி தீவிர பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குற்றவாளிகள் தப்பிச் செல்வதை தடுத்தல், சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைவதனைத் தடுத்தல், தடை செய்யப்பட்ட பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வருவதைத் தடுத்தல் போன்ற குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்கிலேயே தீவிர பாதுகாப்பு வலயம் ஒன்றை செயற்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்காக முப்படையினர், விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் மற்றும் வடக்கு மீனவ பிரஜைகள் ஆகியோர் ஒன்றிணைந்துள்ளனர் . நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்புக்காக முழு ஒத்துழைப்புடன் செயற்படத் தயாராக உள்ளோம். சட்டவிரோத குடியேறிகள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காவே வடக்கு மீன்பிடி பிரஜைகளின் பாதுகாப்பு குழுவின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (ந-இ)

## நியூ டைமன்ட் தீ விபத்து;

# 442 மில்லியன் ரூபா இழப்பீட்டை வழங்க உரிமையாளர் இணக்கம்

**கொழும்பு, செப்.27**
**சட்டமா அதிபர் திணைக்களத்தின் கோரிக்கையை ஏற்று 442 மில்லியன் ரூபா நஷ்டஈட்டை வழங்குவதற்கு நியூ டைமன்ட் கப்பலின் உரிமையாளர் தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பான இணக்கப்பாட்டை சட்ட மா அதிபருக்கு கப்பலின் உரிமையாளர் அறிவித்துள்ளார் என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 3ஆம் திகதி நியூ டைமன்ட் கப்பலில் ஏற்பட்ட தீயையடுத்து, கடற்படை, விமானப் படை உள்ளிட்ட அனைத்து பிரிவினராலும் மேற்கொள்ளப்பட்ட தீயணைப்பு, மீட்பு,பராமரிப்பு நடவடிக்கைச் செலவுகளுக்காக ரூபா 340 மில்லியனை நஷ்டஈடாக செலுத்துமாறு சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா கடந்த வாரம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு கப்பல் உரிமையாளர்கள் தரப்பிலிருந்து இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தீ விபத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் தொடர்பான நிபுணர் மதிப்பீட்டைத் தொடர்ந்து மேலும் இழப்பீட்டுத் தொகை கோரத் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் மேலும் 100 மில்லியன் ரூபாவுக்கான நஷ்டஈட்டுக் கோரிக்கையை சட்டமா அதிபர் திணைக்களம் நேற்றுமுன்தினம் முன்வைத்தது.

இதையடுத்து இதுவரை கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகையை முழுமையாச் செலுத்துவதற்கு கப்பல் உரிமையாளர் தரப்பிலிருந்து இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## சட்டவிரோத கட்டடங்கள்; நடவடிக்கைகள் தீவிரம்

கண்டி, செப்.27
கண்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ள அனைத்துக் கட்டுமானங்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இதனை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டியில் ஆபத்தான மற்றும் சட்டவிரோத கட்டடங்கள் அனைத்தையும் அடையாளம் கண்டு ஆராய்வதற்கு 21 பொறியியலாளர்களைக் கொண்ட நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழு ஏற்கனவே இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இதனடிப்படையில் சம்பந்தப்பட்ட அனைத்து கட்டுமானங்களிலும் முழு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, ஆபத்தைத் த்டுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்காக கட்டுமான உரிமையாளர்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை இலவசமாக வழங்குவதே முதல் படியாக இருக்கும் என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே மேலும் தெரிவித்தார். கண்டி பூவெலிகட பகுதியில் 5 மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் பச்சிளம் குழந்தை உட்பட மூவர் உயிரிழந்தனர். அந்தக் கட்டட்ம் தொடர்பான இறுதி அறிக்கை திங்கள் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப்.27
கட்டட தொழிலில் ஈடுபட்டு வந்த நபரொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் பண்டாரகமஅட்டலுகம பகுதியில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் 34 வயதான நாவலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது. (வ-இ)

## அதிகாரக் குறைப்பை ஏற்றுக்கொள்கிறேன்

*பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு*



கொழும்பு, செப்.27
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நியமிப்பையடுத்து பொலிஸ்மா அதிபரின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கிறேன் என பதில் பொலிஸ் மா அதிபர் சீ டி விக்ரமரத்ன தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் அநுருந்த ஜயசிங்க மீண்டும் சேவையில் இணைவதற்கு காணப்படும் தடைகள் தொடர்பில் கேட்டறிய பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டி விக்ரமரத்ன நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாகவும், அரசியல் பழிவாங்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## கண்டியில் சரிந்து வீழ்ந்த கட்டட உரிமையாளரிடம் சாட்சியங்கள் பதிவு

கொழும்பு, செப்.27
கண்டி பூவெலிக்கடை பகுதியில் சரிந்து வீழ்ந்த ஐந்து மாடிக்கட்டடத்தின் உரிமையாளரிடம் பொலிஸார் சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளனர். உரிமையாளர் வழங்கிய தகவல்களுக்கு அமைய அந்தக் கட்டடத்தை நிர்மாணித்த நபரிடம் சாட்சியத்தைப் பெற்றுக்கொள்ள பொலிஸ் குழுவொன்று மாத்தளைக்குச் சென்றுள்ளது. (வ-இ)

## பாட்டியின் மருந்தை விழுங்கிய குழந்தை வைத்தியசாலையில்

கொழும்பு, செப்.27
குழந்தையொன்று தனது பாட்டியின் மருந்துகளை தவறுதலாக விழுங்கிய சம்பவம் மீஹாகிவுல பகுதியில் இடம்பெற்றுள்ளது. ஒரு வயதும் 6 மாதங்களும் நிரம்பிய அந்தக் குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. குழந்தைக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## கொரோனா சாவு இரட்டிப்பாகலாம்

*எச்சரிக்கிறது உலக சுகாதார அமைப்பு*

ஜெனிவா, செப்.27
கொரோனாத் தடுப்பு மருந்து பயன்பாட்டிற்கு வரும்முன் உலகளவில் வைரஸ் தொற்றால் இருபது லட்சம் பேர் உயிரிழக்கலாம் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் அவசர நிலைகளுக்கான தலைவர் மைக் ரேயோன் இது தொடர்பில் தெரிவிக்கையில்;

உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்படவில்லை என்றால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## எஸ்.பி.பி. மறைவுக்கு சங்கக்கார இரங்கல்

கொழும்பு, செப்.27
பிரபல பாடகர் எஸ்.பி.பியின் மறைவுக்கு முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது ருவிட் டர் தளத்தில், பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் சிறந்த குணம் கொண்டவர்.
இவரது இழப்பு பல மில்லியன் மக்களுக்கான ஒரு சோகச்செய்தியாக அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

## ஆனையிறவில் பஸ்கள் சோதனை

கிளிநொச்சி, செப். 27
ஆனையிறவு பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் நேற்று போக்குவரத்தில் ஈடுபட்ட பஸ்களை மறித்து சோதனையிட்டனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவு பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த இராணுவத்தினரால் சோதனை சாவடி ஒன்று அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கை இடம்பெற்று வந்தது. கடந்த இரண்டு மாதங்களாக அங்கு சோதனைகள் இடம்பெறவில்லை. பொலிஸார் மணல் ஏற்றிச்செல்லும் டிப்பர் வாகனங்களை பதிவுசெய்வதுடன் இராணுவத்தினரும் கடமையில் இருந்து வருகின்றனர். சந்தேகத்துக்கிடமான வாகனங்களை மறித்து சோதனையிடுகின்றனர். இந்த நிலையில் நேற்று ஆனையிறவில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. பஸ்கள் மறிக்கப்பட்டு பயணிகள் இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டன. பஸ்களும் சோதனையிடப்பட்டன. (கு-6)

## மான் வளர்த்த நபர் கைதானார்

கொழும்பு, செப்.27
அனுமதியின்றி மான் மற்றும் மயிலை வளர்த்து வந்த நபரொருவர் கொட்டகலை வூட்டன் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார். தேசிய புலனாய்வு அதிகாரிகள் வழங்கிய தகவலுக்கமைய பண்ணையொன்றிலிருந்து இந்த விலங்குகள் வனவிலங்கு அதிகாரிகளால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன. (வ-இ)

# நீதித்துறையின் சுதந்திரத்தை ‘20’ வலுவிழக்கச் செய்யும்

### சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப்.27

**அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருக்கும் அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமானால், அது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்தும் அதேவேளை, நீதித்துறை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் சுதந்திரத்தைப் பெரிதும் வலுவிழக்கச்செய்யும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.**

UNHRC

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 45 வது கூட்டத்தொடரில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் உத்தரவாதம் ஆகியவற்றை மேம்படுத்துதல் தொடர்பான ஐ.நாவின் முன்னாள் விசேட அறிக்கையாளர் பாப்லோ டி கிறீப்பினால், இலங்கை தொடர்பான விசேட அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்அறிக்கையை சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஆசிய அமையம் உள்ளிட்ட 5 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து கூட்டாக வெளியிட்டிருக்கின்றன.

அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது:

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்களில் மீண்டும் பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய விதமாக அரசாங்கம் செயற்பட்டுவரும் நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை தொடர்பில் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்புக்கள் வலியுறுத்தியிருக்கின்றன. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்தமைக்காக ஐ.நா விசேட அறிக்கையாளருக்கு நன்றி கூறுகின்றோம். அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புபட்ட வகையில், அண்மைக்காலமாக இலங்கையின் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் நிலவரம் தொடர்பில் சில முக்கிய விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## மில்லேனியம் சிற்றி வழக்கின் சான்று ஆவணங்கள் மாயம்?

கொழும்பு, செப்.27

2002 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி இராணுவப் புலனாய்வுப் பிரிவு நடத்திச்சென்ற மில்லேனியம் சிட்டி பாதுகாப்பு இல்லம், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான முறைப்பாட்டின் சில சான்று ஆவணங்கள் காணாமற்போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலான ஆவணங்களை பாதுகாப்பாக களஞ்சியத்தில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், அந்த உத்தரவை நிறைவேற்றத் தவறியமை தொடர்பில் உடனடியாக அறிக்கை தாக்கல் செய்யுமாறு இந்த சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோது கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

மில்லேனியம் சிற்றி பாதுகாப்பு இல்லம் சுற்றிவளைக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பலவுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ந-இ)

## சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு நிச்சயமாக பதிலளிப்பேன்

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மைத்திரி

கொழும்பு, செப்.27

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நிச்சயமாக பதிலளிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் வழங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஒக்ரோபர் 6 ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த ஆணையகத்தில் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நிச்சயமாக பதிலளிப்பேன் எனவும், மேலும் பல சர்ச்சைக்குரிய உண்மைகளை வெளிப்படுத்துவேன் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னணி உறுப்பினர்களிடம் அவர் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)

## இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த விபத்தில் காயம்

கொழும்பு, செப்.27

அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும், இராஜாங்க அமைச்சருமான இந்திக்க அனுருத்தவின் வாகனம் நேற்று காலை விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் காயமடைந்த இராஜாங்க அமைச்சர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவரது உடல் நிலை மோசமான கட்டத்தில் இல்லை என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-இ)

## அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட சுதந்திரக்கட்சி தயாராக வேண்டும்

### கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, செப்.27

சுதந்திரக்கட்சி மீண்டும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தயாராக வேண்டும் என கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார். கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவின் நினைவு தின நிகழ்வின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நினைவு தின நிகழ்வு நடைபெற்றது.

பண்டாரநாயக்கவின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்திய ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினர் அதன் பின்னர் பண்டாரநாயக்கவின் கொள்கைகள் தொடர்பாக கருத்து வெளியிட்டனர். (ந-இ)

## கொழும்பு துறைமுக நகரில் சைக்கிள் பாதை நிர்மாணம்

கொழும்பு, செப்.27

கொழும்பு துறைமுக நகர் நுழைவாயிலுக்கு அருகிலிருந்து பத்தரமுல்லை - தியத்த உயன வரை சுமார் 23 கிலோமீற்றர் தூரத்திற்கு சைக்கிள் பாதைக் கட்டமைப்பை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகளில் பங்கேற்பவர்களை இலக்காகக் கொண்டு இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது என நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேல் மாகாண ஆளுநர் வை.ஏ.பி.கே குணதிலக்க குறிப்பிட்டார். துறைமுக நகரின் நுழைவாயி லில் ஆரம்பமாகும் இந்த புதிய பாதை, காலி வீதிக்கு இணையாக சாரணர் வீதியூடாக பேர வாவி திசைக்கு திரும்பி, கங்காராம விகாரைக்கு அருகில் விகாரமாதேவி பூங்காவை நோக்கி செல்லவுள்ளது. அங்கிருந்து தாமரைத் தடாகத்தினூடாக சுதந்திர சதுக்கம், பௌத்தாலோக மாவத்தை, பொரளை பொது மயானத்தினூடாக பேஸ்லைஸ் வீதியைக் கடந்து பத்தரமுல்லை நோக்கி செல்லவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## திருமலை எண்ணெய்த் தொட்டிகள் குத்தகைக்கு

### இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

கொழும்பு, செப்.27

திருகோணமலையில் உள்ள எண்ணெய் தொட்டிகளில் சிலவற்றைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

2003 ஆம் ஆண்டில் இலங்கையால் இந்தியன் எண்ணெய் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட 99 தொட்டிகளில் 15 ஐ இந்திய நிறுவனம் புதுப்பித்துள்ளது. பண்ணையில் தற்போது 99 எண்ணெய் தொட்டிகள் இருப்பினும், அவை போதிய சேமிப்பு திறன் இல்லாததால் இலங்கைக்கு ஆற்றல் பாதுகாப்பு பிரச்சினை காணப்



படுகின்றன என அமைச்சர் உதய கம்மன்பில ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தொட்டி பண்ணையிலிருந்து குத்தகைக்கு விடப்பட்ட சில எண்ணெய்த் தொட்டிகளை திரும்பப் பெற இந்தியாவுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளோம். இந்த விடயத்தில் இலங்கைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதை இந்தியா புரிந்துகொள்ளும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.


இதேவேளை, கடந்த அரசாங்கம் பொருளாதார திட்டங்களின் ஒத்துழைப்பு தொடர்பான எல்.ஐ.ஓ.சி மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஒரு கூட்டு முயற்சியை அமைக்க முடிவு செய்தது. அவசரகால சூழ்நிலையில் மின் உற்பத்திக்கு எரிபொருளை சேமிக்க 2016 ஆம் ஆண்டில் கூட்டு முயற்சியாக தொட்டிகளை உருவாக்கி இயக்கும் யோசனையை அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்மொழிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# அறிவியல் மொழியாகத் தமிழ்



பா.காயத்திரி
பேராதனை பல்கலைக்கழகம்

**“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்”** எனப் பாரதியாரால் போற்றப்பட்ட மொழி தமிழ் மொழி. கல்வெட்டில் இருந்து கணனி வரை பரந்து “அறிவியல்”; என்ற மொழியாக தமிழ்மொழி வளர்ந்து வருகின்றது. தமிழில் மரபு வழிப்பட்ட அறிவியலும், தொழில் நுட்பவியலும் வழக்கில் இருந்துள்ளதைத் தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ள இரும்பு, செம்பு போன்ற உலோகப் பொருட்கள் உறுதி செய்கின்றன. மருத்துவம், வேளாண்மை, கால்நடை, மருத்துவம், சிற்பவியல், கட்டடவியல் போன்ற அறிவியல் துறைகளின் பயன்பாடுகள் பற்றிய செய்திகளை இலக்கியப் படைப்புகள் வரலாற்று ஆவணங்கள் மூலம்



அறிய முடிகின்றது. அவை பண்டைக் காலத்தில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் கடந்த முந்நூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட ஓலைச் சுவடிகளில் வெடிமருந்து தொழில்நுட்பம், கால்நடை, மருத்துவம் போன்ற பல்வேறு அறிவியல் துறைகள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. இத்தகைய மரபு அறிவியல் குறிப்பிட்ட பிரிவினரிடம் மட்டும் வழக்கில் இருந்திருக்க வாய்ப்புண்டு.

ஐரோப்பியரின் இந்திய வருகைக்குப் பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டில் மேலைநாடுகளில் வெளியான அறிவியல் நூல்கள், இதழ்களைப் போன்று தமிழிலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அறிவியல் தமிழுக்கு ஆதாரமாகும். தொழிற்புரட்சியின் காரணமாக ஐரோப்பாவெங்கும் பரவிய அறிவியல் சிந்தனைகளின் வீச்சு தமிழ்நாட்டிலும் பரவியதன் விளைவுதான், தமிழில் அறிவியல் நூல்களின் வெளிப்பாடு. தொடக்கத்தில் தமிழ் அறிவியல் நூல்கள் ஆங்கிலத்தில் வெளியான அறிவியல் நூல்களைத் தழுவியோ மொழிபெயர்த்தோ வெளியிடப்பட்டன. இத்தகைய நூல்களுக்கு அன்று பெரிய அளவில் வரவேற்பு இருந்திருக்க வாய்ப்பு இல்லை. எனினும் ஆங்கிலேயர் ‘மெக்காலே’ கல்வி முறையைத் தமிழகத்தில் அறிமுகம் செய்தபோது சூழலில் மாற்றம் ஏற்பட்டது. தமிழின் மூலம் அறிவியல் பாடங்களைக் கற்கும் நிலை ஏற்பட்டபோது அறிவியல் மொழிபெயர்ப்புகள் பெரிய அளவில் உதவின.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது இன்று முழுமையாக அறிவியல் தொழில்நுட்பத்தைச் சார்ந்துள்ளது. தமிழ் மொழியின் வளர்ச்சியும், மாறிவரும் புதிய உலகின் போக்குகளை வெளிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. மேலைநாடுகளுக்கும் தமிழகத்திற்கும் இடையில் அறிவியல் துறைகளில் நாளும் விரிவடையும் இடைவெளியைக் குறைத்திடல் வேண்டும். தமிழ்மொழியை அண்மைக் காலத்தியதாக ஆக்க வேண்டுமெனில், தொடக்க நிலையில் மொழிபெயர்ப்புகள் பல்கிப் பெருக வேண்டும். அப்பொழுதுதான் தமிழர் வாழ்க்கை வளம் அடையும்.

அறிவியல் நூற்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் என்பது தொடரும் பணியாகும். இதன்மூலம் அறிவியல் மரபு தமிழில் உருவாகும்; அறிவியல் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான வளமுடையதாகத் தமிழ்மொழி வளமடையும். பின்னர் துறைசார்ந்த இதழ்கள் தமிழில் வெளிவரும் நிலைமை ஏற்படும்.

ஒப்பீட்டளவில் அறிவியல் மொழிபெயர்ப்பானது, இலக்கிய மொழி பெயர்ப்பிலிருந்து மாறுபட்டது. அறிவியல் மொழிபெயர்ப்பில் உணர்ச்சி, சந்தம், ஒலிநயம், அலங்காரச் சொற்கள், ஆரவாரமான தொடர்கள் போன்றவற்றுக்கு இடமில்லை. அதே சமயம் கலைச்சொற்களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

அறிவியல் மொழிபெயர்ப்புகளில் கருத்துகளுக்குத்தான் முதலிடம் தருதல் வேண்டும் ; மொழி நடை கருத்தை வெளிப்படுத்தும் ஊடகமாக மட்டும் அமைந்திடல் வேண்டும்.

மொழிபெயர்ப்பாளர் மூல மொழியிலுள்ள அறிவியல் கருத்துகள் பற்றிய செறிந்த அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அறிவியல் வல்லுநர் மூலமொழியில் எத்தகைய குறிக்கோள் அல்லது கருதுகோளை வலியுறுத்த விரும்பினாரோ, அதனைப் பெறுமொழியிலும் கொண்டு வருமாறு மொழிபெயர்ப்பு அமைந்து இருத்தல் சிறந்த அறிவியல் மொழிபெயர்ப்புக்கு இலக்கணம் ஆகும்.

இருபதாம் நூற்றாண்டின் அறிவியில் வளர்ச்சி என்பது அறிவியல் நூல்களை மட்டும் சார்ந்தில்லாமல், அறிவியல் இதழ்களைச் சார்ந்தும் இருந்தமை கண்கூடு. இந்த நூற்றாண்டில் நூற்றுக்கணக்கான அறிவியல் இதழ்கள் அறிவியலின் துறைகள் தோறும் தோற்றம் பெற்றன. சில தளர்நடையிட்டன. சில வீறுநடை போட்டன. வீறுநடை போட்ட இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அறிவியல் இதழாகக் கலைக்கதிரைக் கூறலாம்.

கலைக்கதிர் புத்தம் புதிய அறிவியல் செய்திகளைத் தமிழில் கொண்டுவர வேண்டும் என்னும் உயரிய நோக்கில் தொடங்கப்பட்ட தொன்று டாக்டர் ஜி.ஆர். தாமோதரன் 1948 ஆம் ஆண்டில் கலைக்கதிர் என்ற மாதாந்த இதழைத் தொடங்கினார். தொடக்கம் முதல் 1984 ஆம் ஆண்டுவரை அறிவியல் கட்டுரைகள் அதிகம் இடம்பெறும் பல்சுவை இதழாகவே வெளிவந்தது இவ்வேடு. அதன்பின் மாற்றம் பல பெற்று அறிவியல் செய்திகளை மட்டும் தாங்கிவரும் முழுமையான அறிவியல் இதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அடுத்த தமிழ் அறிவியல் இதழாக “யுனஸ்கோ கூரியர்” இதழைக் கூறலாம்.






தமிழக அளவில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் அறிவியலைத் தெளிவாகவும், சொற்செட்டோடும், பொருட்செறிவோடும் தமிழில் தரமுடியும் என்பதை ஆழமாகவும், அழுத்தமாகவும் உணர்த்தி நிலைநாட்டிய பெருமை “யுனெஸ்கோ கூரியர்” எனும் தமிழ்த் திங்கள் இதழையே சாரும். “துளிர்” அறிவியல் சிறுவர் இதழ் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறுவர்களுக்கென்றே சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கும் ஒரே அறிவியல் மாத இதழ் ஆகும். தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து 1987 ஆம் ஆண்டு நவம்பர் 14 திகதியான குழந்தைகள் தினத்தன்று முதல் “துளிர்” இதழை வெளியிட்டன. சிறுவர்களின் உள்ளத்தில் அறிவியல் உணர்வை ஊட்ட வேண்டும் என்ற இலட்சியத்துடன் இவ்விதழ் தொடங்கப்பட்டது. அறிவியல் செய்திகளைத் தொகுத்துத் தருவதோடு “யுரேகா” அறிவியல் கேள்வி பதில் போன்ற பகுதிகளைச் சிறுவர் முதல் பெரியோர் வரை படித்து இன்புறும் வண்ணம் வெளியிட்டு வருகின்றது.

தமிழில் கணிப்பொறி அறிவியல் குறித்து எழுதும் முயற்சி சென்ற நூற்றாண்டின் எண்பதுகளிலேயே தொடங்கிவிட்டது எனலாம். மணவை முஸ்தபா, சுஜாதா போன்ற எழுத்தாளர்கள், கணிப்பொறி விந்தைகளைக் கதைகளில் எழுதியது மட்டுமின்றிக் கணிப்பொறி அறிவியல் குறித்துப் பொதுமக்களுக்கான நூல்களையும் எழுதியுள்ளனர். சுஜாதா கணித்தமிழ்ச் சொல்லாக்க முயற்சியாக ஆயிரம் கணிப்பொறி வார்த்தைகள் என்னும் நூலை வெளியிட்டார். பத்திரிகைகளிலும் பொதுவான கணிப்பொறிச் செய்திகளை அவ்வப்போது எழுதிவந்தார். யுனெஸ்கோவின் கூரியர் தமிழ்ப் பதிப்பில் அதன் ஆசிரியர் மணவை முஸ்தபா தொடக்கக் காலந்தொட்டே கணிப்பொறி தொடர்பான கட்டுரைகளைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளார்கள்.

கணிப்பொறி அறிவியலின் அனைத்துப் பிரிவுகள் பற்றியும் மேற்கண்ட இதழ்களில் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. சாதாரணமாகக் கணிப்பொறியின் செயல்பாடு தொடங்கி, செயற்கை நுண்ணறிவு (செயற்கை நுண்ணறிவு), மீத்திறன் கணிப்பொறித் தொழில்நுட்பம் (சூப்பர் கணினி தொழில்நுட்பம்) வரையிலான அதிநவீன கணிப்பொறி அறிவியல் முன்னேற்றங்கள் பற்றிய கட்டுரைகள் உடனுக்குடன் வெளியிடப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட ஐந்து இதழ்களுமே கணித்தமிழ்ச் சொல்லாக்கத்தைக் கருத்தில்கொண்டு கட்டுரைகளைக் கவனமாகத் தொகுத்து வெளியிடவில்லை என்றபோதிலும், மறைமுகமாகவேனும் கணித்தமிழ்ச் சொல்லாக்கத்திற்கு அவை பங்களிப்புச் செய்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

அறிவியல் களஞ்சியங்கள் அறிவியல் கல்விக்கு உற்ற துணையாக விளங்குகின்றன. மேலும் ஒவ்வோர் அறிவியல் துறைக்கும் தனித்தனியாகக் களஞ்சியங்களைத் தமிழில் உருவாக்கினால் “அறிவியல் தமிழ்” மேன்மேலும் வளர்ச்சியடையும். தமிழ் அறிவியலில் துணை நூல்கள் இல்லை என்னும் நிலையும் மாறும்.



# கலைசார் பிரதிநிதித்துவம்

சி.பாக்கியராஜ்
4 ஆம் வருடம்
நுன்கலைத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

*(கடந்த வார (20/09/2020) சூரியகாந்தியில் வெளியான கட்டுரையின் இறுதிப் பகுதி இது)*

ஜோர்ச்கீற் சுயமாகவே ஓவியம் வரையக் கற்றுக் கொண்டவராகக் காணப்படுகின்றார். இவரின் ஓவியங்கள் தம்மையே பிரதிபலிக்கும் வண்ணமே அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் இவரின் ஓவியங்களில் பெண்கள் நிர்வாணமாகவும் அரைகுறை ஆடைகளோடும் கவர்ச்சி தன்மைகளோடும் சித்தரிக்கப்படுகின்றனர். உதாரணம் ஆரம்பகால படைப்புகளில் ஒன்றான கோவிந்தம்மா, இந்த ஓவியத்தில் காட்டப்படும் பெண் தன்னை முழுமையாகப் பார்க்க சம்மதிக்கும் வண்ணமாக அமையப் பெற்றமையைக் காணலாம். பெண் உருவமானது தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வண்ணம் (தலையில் பூ, கழுத்து கைகளில் அணிகலன்கள்) காணப்படுகிறது. அந்த வகையில் ஜோர்ச் கீற் என்ன விரும்புகிறார்? தமிழ்ப் பெண்கள் மீதுள்ள இச்சையால் அவர்களை எவ்வாறு காண முயல்கிறார், பெண்களிடம் அவர் எதிர்பார்க்கும் காம விருப்பம் என்பவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

இங்கு காட்டப்படுவது ஒரு தமிழ் பெண் அல்ல, மாறாக இவை ஜோர்ச் கீற்றின் விருப்பம் என்பதாகவே எனக்குப் புரிகின்றது. தொடர்ந்தும் கீற்றினால் வரையப்பட்ட ஓவியங்கள் பெரும்பாலும் நிர்வாணக் கோலம் கொண்டிருந்தாலும், எண்ணக்கரு ரீதியாக மாறுபட்ட தன்மைகளைக் கொண்டுவந்துள்ளது. அவை வரலாற்று ஓவியமாகவும், தேசியமல்லாத கருத்துகளை வெளிப்படுத்தும் வண்ணமும் வாசிக்கப்பட்டன. விகாரமாதேவி எனும் ஓவியம் பாணி ரீதியாகவும் மாற்றம் அடைவதோடு அதை நிர்வாணக் கோலம் கொண்ட விக்கிரமாதேவியுடன் பெண்கள் சிலரும் காட்சிப்படுத்தப்படுகின்றனர்.

இது தூய்மையான ஆரிய இனத் தேசியவாத வெளிப்பாடாகப் பார்க்கப்பட்டது. ஆனால் இங்கும் பெண்கள் கவர்ச்சியாகவும் நிர்வாணக் கோலத்திலும் காட்டப்படுகின்றனர். இங்கு பெண்களை முழுமையாக ஆடைகள் மூலமாக சித்தரித்து சிறப்பாகக் காட்டியிருக்கலாம். ஆனால் இங்கு ஜோர்சகீற் தனது பெண்கள் மீதான பாலியல் ஆர்வத்தை வெளிக்காட்டி நிற்கின்றார். ஆனால் முன்புபோல் அல்லாது, இங்கு காட்டப்படும் தேசியவாத கருத்துக்கள் மூலமாக அம்மணக்கோலம் என்பது மறைக்கப்பட்டுவிட்டது. இதனால் கீற் இவ்வாறான எண்ணக்கருக்களை முன்வைத்து பெண்களைக் கவர்ச்சியாகக் காட்ட வழிகோலியது. இங்கு கீற்றின் பிரதிநிதித்துவம் ஓவியங்களில் வெளிப்படுத்தப்பட்டாலும், பெண் மீதான ஆர்வம், காம பண்புகள், சிங்கள பௌத்த தேசியவாதம் பேசியதாக ஓவியம் பிரதிநித்துவம் செய்வதன் மூலமாக கீற்றின் பெண்களின் உடல் மீதான பார்வைத்தனம் என்பது மறைக்கப்பட்டுள்ளது.

இங்கு கவர்ந்து இழுக்கும் போது கீற் ஓவியம் மூலம் அவரின் பண்புகள் மீதான நாட்டம் அல்லது விருப்பம் தெளிவாகத் தெரிவதோடு தேசியம், பாரம்பரியம், குடும்ப வழி எனும் கருப்பொருட்களை பிரதிநித்துவம் செய்வதன் மூலமாக தன்னைப் பிரதிநிதித்துவம் செய்ததை மறைத்துள்ளார் எனப் புரிகின்றது.

இது மட்டுமல்ல ஜோர்ச் கீற்றின் ஓவியத்தில் படைப்பாளி ஆதிக்க அதிகாரம் என்பது தெளிவுபடுகின்றது. கீற்றினால் ஆணாதிக்கத்தின் பிரதிநிதித்துவம் சாய்கின்றது. ஓவியம், பெண்கள் படைப்பாளியின் அடிமையாக தோன்றும் படைப்பாளியின் விருப்புக்குரியனவாகவும், படைப்பாளியின் பாலியல் இச்சைக்குரியனவாகவும் காணப்படுவதனை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

ராதையை வரையும் கிருஸ்ணன் எனும் ஓவியத்தில் கிருஸ்ணன் ராதையை வரையும் வண்ணமும் தூரிகை மார்பைத் தொடும் வண்ணம் அமைந்துள்ளது. இங்கு கீற்றின் ஆணாதிக்கம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது. இதுபோன்று ஓவியப் பெண்ணானவள் படைப்பாளியின் பாலியல் நடத்தையோடு இசைவடையும் தன்மை வெளிக்காட்டப்படுகின்றது. எதிர்ப்பின்றி, படைப்பாளியின் தீண்டலுக்கு சம்மதம் தெரிவிக்கும் வண்ணமாக செயல்பட வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

இதன் மூலம் கீற்றின் ஓவியம் பெண் மீதுள்ள பார்வை எவ்வாறானது என்பதையும், ஓவியம் பிரதிநிதித்துவம் செய்கிறது. கீற்றின் பாலியல் ரீதியிலான மேலாண்மையை இது எடுத்துக்காட்டுகிறது. இங்கு பெண்மை பார்வைப் பொருளாகவும், ஆண் பார்க்கப்படுபவராகவும் இவரின் படைப்புகள் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

1935ல் கலை மறுமலர்ச்சியுடன் இதிகாச வளர்ச்சி இதனால் காமுக முனிவர், காதல் தெய்வங்கள், தேவகன்னி என்பவை உள்ளடக்கமாக காணப்பட்டது இங்கு பெண் உடல் குறியீட்டுத்தனம் பாணியமைப்பை அதிகரித்தது. பிற்பட்ட காலங்களில் தேசியவாதிகளின் மௌனம் சிலர் இவ் உருவங்களை பெண் தெய்வங்கள், தாய் தெய்வங்கள் வளம்சார் குறியீடுகள் என வாசிக்க வைத்தது. இதனால் நிர்வாண பெண் உருவங்களும் தெய்வங்களைப் பிரதிநிதித்துவம் செய்தன.



இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தேசியவாதிகள் மற்றும் சிலர் நிர்வாணப் படங்களை ஆதரித்து கருத்து தெரிவிக்கின்றனர். அத்தோடு சில நிர்வாண வடிவங்களை மரபுசார் ஆத்மீகம் என்பவற்றோடு இணைத்து அது சார்ந்து பிரதிநிதித்துவம் செய்யகின்றனர்.

ஒட்டுமொத்தமாகக் கீற்றினுடைய பெண்ணுடல் வடிவமைப்பு என்பது கீற்றின் பார்வையை அல்லது பெண்களை அவர் எவ்வாறு காணமுனைகிறார் என்பதை ஓவியங்கள் பிரதிநித்துவம் செய்வதோடு, வெவ்வேறு எண்ணக்கரு மூலமாக அதனை மறைக்க முயன்றமை புலப்படுகின்றது. பெண்களை பெரும்பாலும் கவர்ச்சிப் பொருளாக கைக்கொண்டுள்ளதால் கீற் ஆணாதிக்கமும், முழு படைப்பாளியின் அதிகாரத்துவத்தினையும் இவரின் ஓவியங்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாண மேலாதிக்க சமூகமானது பெண்களை ஆண்களிலிருந்து வேறுபடுத்தி, அவர்களுக்கு உரித்தான பண்புகளை அடியாகக் கொண்டு வளர்த்தெடுக்கிறது. வளர்ப்புநிலை, பண்பாட்டு நிலை, கருத்துநிலை, ஒழுங்கமைப்பு, அதிகார உறவு என்பவற்றைக் கொண்டு ஆண்பெண் இடையிலான உறவை வளர்க்கின்றது. இவ்வாறு பெண்ணை பெண்ணுக்குரிய குணாதிசயங்களோடு (அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு) பார்க்கப்படுகின்றது. அத்தோடு அமைதி, அறியாமை, கற்பு கொண்டவர்களாகவும் எதிர்பார்க்கின்றது.

இத்தகைய பண்புகளைக் கொண்ட பெண்களையே இந்தச் சமூகம் ஏற்கின்றது. இதற்கு எதிர்ப்பண்புகள் கொண்ட பெண்கள் சமூகத்தில் குறைவான மதிப்புடன் காணப்படுவர். இங்கே எதிர்பார்க்கப்படும் அல்லது விரும்பப்படும் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணமே விளம்பரப் பலகைகள் சித்தரித்துள்ளன. முழுமையான சேலை அணிந்த வண்ணமும், சிவப்பழகுடன் ஆபரணம் மிளிர யாழ்ப்பாண மேலாதிக்க சமூக பண்பாட்டை பிரதிபலிக்கும் பெண்ணுருக்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இங்கு எந்தவொரு விளம்பரப் பலகைகளிலும் அரைகுறை ஆடைகளோடு உடலை கவர்ச்சிப்படுத்திய வண்ணம் காட்டப்படவில்லை.

பெரும்பாலும் இவ்வகை கவர்ச்சி வடிவங்கள் சிகை அலங்கார நிலையங்களிலேயே காணப்படுகின்றன. இவை பெரிதும் ஆண்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணமாக, அவர்களின் பார்வைக்கு விருந்தாக அமையப்பெற்றுள்ளன. இங்கு ஆணாதிக்க பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது, பெரும்பாலும் கடைகளில் ஆணுருவப் படங்கள் கொண்டு வரப்படவில்லை. மாறாக ஆணுக்கான பார்வைக்கான படங்கள் கொண்டு வரப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பெண்களை தெய்வத்தின் வழியாக பார்க்கின்றனர். "லட்சுமி கரமான" பெண்களாக நோக்குகின்றனர். இங்கு பெண்கள் தெய்வம்சத்தோடு, தெய்வங்களை பிரதிபலிக்கும் வண்ணமாக விளம்பரப்படுத்தப்படுகின்றனர். சில நகைக் கடைகளில் லட்சுமி அம்மன் போன்ற தெய்வங்கள் போலவே யாழ்ப்பாண பெண்கள் கலாசார பண்புகளோடு தோற்றமளிக்கின்றனர். அது போலவே சினிமா அல்லது சாதாரண பெண்களை சித்தரிக்கும் பொழுதும் இவ்வாறு தெய்வம்சமாகவே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது.

ஒட்டு மொத்தமாக நோக்கும்போது, யாழ்ப்பாண விளம்பரப் பலகைகளில் பெண் என்பவள் முக்கியமானதொரு விடயமாக காணப்படுவதோடு, அப்பெண் யாழ்ப்பாண மேலாதிக்க சமூக கலாச்சார பண்பாட்டு அடையாளங்களை பிரதிநிதித்துவப்படுத்துபவளாக சித்தரிக்கப்பட்டு காணப்படுகின்றாள். முழுமையாக மூடிய சேலை ஆடை மூலமான காட்சியைக் கொண்டு வந்துள்ளமை சிறப்பானது. விளம்பரம் என்பது, நுகர்வோரை தம்வசப்படுத்தும் ஒரு உத்திமுறையாகும். அந்த வகையில் யாழ்ப்பாண விளம்பரம், யாழ்ப்பாண பெரும்பான்மை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே காணப்படுகின்றது. விளம்பரப் பலகைகளில் ஆண்உருவம் பெரும்பாலும் கொண்டுவரப்படவில்லை. யாழ்ப்பாணச் சமூகத்தில் ஆணாதிக்கம் அல்லது ஆணுக்கான நிலை என்பது உயர்வாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் ஆண்களைப் பார்க்க வைக்கும் நோக்கிலும் இவை அமையப்பெற்றுள்ளன. பெண் பற்றிய பார்வை நிலையில் ஆணின் மையக் கருத்து நிலை கொண்டுவரப்பட்டதோடு, இந்தச் சமூக ஆணதிகாரத்தையும் இவை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இதனாலேயே எந்தவொரு விளம்பரத்திலும் பெண்களது வீரமான தன்மையும், வீர தெய்வங்களான காளி துர்க்கை வடிவங்களும் கொண்டுவரப்படவில்லை.

இங்கு காணப்படும் விளம்பரப் பலகைகள் வெறுமனே கவர்ச்சி விளம்பரப்படுத்தல் என்பவற்றைத் தாண்டி மேலாண்மை சமூக கருத்துநிலை, யாழ்ப்பாண சைவ தமிழ் பண்பாடு கலாச்சாரம் என்பவற்றை மையமாகக் கொண்டு அமைந்தன என்று கூறுவதை மறுப்பதற்கில்லை. பிரதிநிதித்துவம் என்பது மேலாதிக்க சமூக கருத்து நிலைகளால் கட்டப்பட்டுள்ளது. அத்தோடு அதைப் பிரதிபலிப்பதாகவும் காணப்படுகின்றது.

# மாணவர்களது கற்றல்சார் குறைபாடுகள்



ச.சஜீபன்
உளவியல் துறை

எத்தனை தடவை சொல்லிக்கொடுத்தாலும் உங்கள் பிள்ளைகள் கற்பதில் சிரமப்படுகிறார்களா? குழந்தைகளைக் கையாள்வது எப்படி என்பது தெரியாமல் குடும்பத்தில் முரண்பாடுகள் ஏற்படுகின்றனவா? இதற்கான காரணங்களை அறியாமல் இடர்பாடுகளை எம்மில் பலர் எதிர்கொள்கின்றனர்.

நன்கு கல்வி கற்கும் குழந்தையைப் போன்ற உடல் ஆரோக்கியமும், தோற்றமும் இருந்தாலும், அறிவு வளர்ச்சி, மூளை வளர்ச்சி என்பதில் பிரச்சினை காணப்படும். இதனை பெற்றோரும் ஆசிரியர்களும் அறிந்திருத்தல் வேண்டும்.

உளவியலாளர்களது கருத்துப்படி, மூளையோடு தொடர்புடைய நரம்புகளில் ஏற்படும் பிரச்சினைகளே, கற்றல்சார் குறைபாட்டுக்குக் காரணம் எனத் தெரிய வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட உளவியலாளருடன் தொடர்பு கொள்வதன் மூலம், உண்மையில் உங்கள் பிள்ளைக்கு என்ன பிரச்சினை என்பதை உளவியல் பரிசோதனை மூலம் கண்டறிந்து நிவர்த்தி செய்ய முடியும்.

கற்றல் குறைபாடு என்பது, சில குழந்தைகளுக்கு, எந்த ஒரு விஷயத்தையும் புரிந்துகொள்ளவோ, தெரிந்த விடயத்தை ஒன்றுடன் ஒன்று சேர்த்து புரிந்துகொள்ளவோ,புதிய விடயத்தை அறிவதில் வியப்பு நிலையும், எழுதும் போதும் சொல்லும் போதும் பின்தங்கிய நிலையையும் ஏற்படுத்தும் மூளைக் கட்டமைப்பில் உள்ள குறைபாடு ஆகும்.

இக்கற்றல் குறைபாடுகளில் 'டிஸ்லெக்சியா' பொதுவான குறைபாடு ஆகும். இது ஏற்படுவதற்கு சரியான காரணம் தெரியவில்லை என்றாலும், பரம்பரை ஒரு காரணமாக இருக்கலாம்.

மேலும் குழந்தையின் மூளையில் அதாவது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்கள் தான் இதற்குக் காரணம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். இவர்களுக்கு பேச்சு, கண்பார்வை, கேள்விப் புலன் உறுப்புகள், மூளை முதலியவை இயல்பாக இருக்கும். இவர்கள் படிப்பதிலும் எழுதுவதிலும் உச்சரிப்பு முதலிய ஆற்றல்களில் குறைவாக இருப்பார்கள். எழுத்துக்கூட்டி வாசிக்கச் சிரமப்பட்டு வார்த்தைகளைப் படிப்பார்கள், தலைகீழாகப் பேசுவார்கள், எழுதுவதில் சிரமம் என பெரும்பாலும் வெளிப்படுத்தல் பிரச்சினைதான் ஏற்படும்.

அடுத்த குறைபாடாக 'டிஸ்கால்குலியா' என்பது



கணிதத்தில் மந்தமாக இருக்கும் நிலையாகும். கூட்டல்,கழித்தல் போன்ற கூட இந்த வகைக் குழந்தைக்கு பிரச்சினை ஏற்படும். மேலும் எண்களைப் புரிந்து கொள்வதில் கூட அடிக்கடி குழப்பம் ஏற்படும்.

'டிஸ்கிராபியா' என்ற குறைபாடுள்ள பிள்ளைகள் வார்த்தைகளைக் கூடச் சரியாக எழுதத் தெரியாமலும், உருவத்தை மாற்றி மாற்றி எழுதுபவர்களாகவும், ஒரு விடயத்தை உள்வாங்குவதிலும் பாதிப்புள்ளவர்களாக மிகவும் கஷ்டப்படுவார்கள்.

அடுத்த வகையான 'டிஸ்ப்ராக்சியா' பற்றி நோக்கின் ஒரு விடயத்தை சொல்லும் போது உடலில் அசைவுகள் காணப்படும். ஆனால் இவர்களிடம் தலையசைப்பது, கையை அசைப்பது போன்றவை சொல்லும் வார்த்தைகளோடு இணைந்ததாகவோ அல்லது அசைவுகள் காணப்படாமலோ இருக்கும்.

இவ் வகையான குறைபாடு உள்ளவர்களை அடையாளம் காண்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், அவர்களை எவ்வாறாக குணப்படுத்த முடியும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.


முக்கியமாகக் கேட்பது, பார்ப்பது, தொடுவது போன்ற பல்வேறு புலன்களைப் பயன்படுத்தி மொழியைக் கற்றுக்கொள்ள அவர்களுக்கு சிறப்பு பயிற்சி கொடுக்கலாம். பாடப்புத்தகம் தவிர பிற கதைப் புத்தகங்களை வாசித்துக் காட்டி அவற்றில் உள்ள எழுத்துகளை அடையாளம் காட்டி மெதுவாக எழுதுவதற்குத் தயார்ப்படுத்தி வந்தால், இது நாளடைவில் குணமாகும்.

பிரச்சினைகள் அவர்களுடைய மனங்களைப் பாதிக்காமல் தனிப்பட்ட விதமாகச் சொல்லிக்கொடுக்கும் போது இந்த மாணவர்கள் நன்கு வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வார்கள். இந்தக் குழந்தைகளை விசேட தேவையுடைய பாடசாலைகளில் விட்டுத்தான் கற்பிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மற்றக் குழந்தைகள் படிக்கும் பாடசாலைகளில் படிக்க வைக்கலாம். விளையாட்டு, பொழுதுபோக்கு போன்றவற்றில் ஈடுபட வைப்பதன் மூலமும் கற்றலில் ஈடுபாட்டை உருவாக்க முடியும்.

குழந்தைகளது உடல், உள ஆரோக்கியத்தில் பெற்றோரது பங்களிப்பை போன்று ஆசிரியர்களது பங்களிப்பும் அவசியம். இத்தகைய குறைபாடுகள் உடைய குழந்தைகளால் எமக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற எண்ணத்தைத் தவிர்த்து நன்றாகக் கவனித்து, முன்னோக்கி இட்டுச் சென்று வாழ்க்கையில் வெற்றி பாதையில் நகர்த்துதல் அனைவரது கடமையும், பொறுப்பும் ஆகும். ■

---

# பட்டங்களை ஆளும் பண்பாளர்



வேல். நந்தகுமார்
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம். இன்று எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லைக் காண்' என்றார் மகாகவி பாரதியார். கல்வியில் எழுச்சி பெற்ற பெண்கள் இன்று பல துறைகளில் உயர்பதவிகளை வகிக்கின்றனர். பெண்கள் கல்வி பெறுவது சமூகத்தின் உயர்வுக்கு அடிப்படையானது.

யாழ்ப்பாணப் பெண் கல்வியின் தொடக்கமாக யாழ்ப்பாணத்து அரசர் காலத்தைக் குறிப்பிடுவர். மருத்துவம், சோதிடம், விவசாயம் போன்ற துறைகளில் பெண்கள் அறிவு பெற்றிருந்தமையை இதற்கான ஆதாரமாகக் காட்டுவர். பெண்கள் மருத்துவிச்சிகளாகத் தொழிற்பட்டமை அனுபவபூர்வமான பெண்கல்விக்கான ஆதாரம் ஆகும். தொடர்ந்து மிசனிறிமாருடைய வருகை பெண்கல்வியில் எழுச்சியை ஏற்படுத்தியது. உடுவில் மகளிர் கல்லூரியின் எழுச்சியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பெண் கல்விக்கான வாய்ப்புகளும் யாழ்ப்பாணப் பெண்களைக் கல்வியில் உயர்வு பெற வைத்தது.

யாழ்ப்பாணத்தில் நிலவிய புராணபடன மரபையும் பெண்கல்விக்கான திறவு கோலாகக் கொள்ளலாம். கோவிலில் புராணம் படித்துப் பயன்கூறுவதைச் செவிமடுப்பதன் வாயிலாகப் பெண்கள் கல்வியைப் பெற்றனர். வடமராட்சி மண் இதன் முன்னோடியாக அமைந்தது என்று பெருமையாகக் கூறமுடியும். புலோலி மண்ணைச் சார்ந்த (பாறாச்சி அம்மாள்) அவர் மகள் பத்மாசனி அம்மாள் எனத் தொடங்கிய இந்தப் பாரம்பரியம்; இன்று பலவழிகளிலும் விரிவுபெற்றுத் திகழ்கின்றது. வடமராட்சியின் வியாபாரிமூலையைச் சேர்ந்த ஒரு பெண் கல்வியில் ஆளுமை பெற்று யாழ்ப்பாணக் கல்வியியற்றுறையின் தலைவர் என்ற தகைமையைப் பெற்று இன்று பெண்கல்விக்குப் பெருமை சேர்த்துள்ளார்.. அவரே மணிவிழாக் காணும் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம் ஆவார்.

வியாபாரிமூலையைச் சேர்ந்த மார்க்கண்டு மகேஸ்வரி ஆகியோரின் இளைய மகளாக 13.07.1959 இல் பிறந்த இவர் கணக்காளர் இராசநாயகத்தைத் தன் வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். தனது பாடசாலைக் கல்வியை புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி என்பவற்றில் பெற்று தனது ஆளுமையை உருவாக்கிக் கொண்டார்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்தில் சிறப்புத் சித்தி பெற்ற பட்டதாரியாகி சேர். பொன். இராமநாதன் நினைவுப் பரிசிலையும் பெற்றுக் கொண்டார். ஆசிரியர் நியமனம் கிடைக்கப் பெற்று கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் தமிழ்க் கலவன் பாடசாலை கிளிநொச்சி இந்துக் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி என்பவற்றில் ஆசிரியராக கடமையாற்றினார். 1997ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியற்றுறை விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

இந்தியக் கல்வி மரபில் ஆன்மீக விழுமியங்களும் இலங்கையில் அதன் தாக்கமும் என்ற பொருளில் ஆய்வு செய்து கலாநிதி பட்டம் பெற்று கடந்த மூன்றாண்டுகளாகக் கல்வியியற்றுறையின் தலைவராக விளங்குகின்றார். கல்விப் புலத்துக்கென நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதிய இவர் சமுதாயக்கல்வி, கல்வித்தத்துவம், நவீன முறையில் தமிழ் மொழி கற்பித்தல் உட்பட ஒன்பது நூல்களையும் எழுதியுள்ளார். அவரது 60 ஆவது அகவை பூர்த்தியையொட்டி ராஜ ஜெயம் என்ற பெயரில் 60 கட்டுரைகள் கொண்ட நூலை அவரது மாணவர்கள் இன்று வெளியீடுசெய்கின்றனர்.

ஒரு தாயைப் போல மிகவும் வாஞ்சையோடு தனது ஆசிரிய மாணவர்களுடனும் ஏனையோருடனும் பழகும் இவரது தாய்மைப் பண்பு கல்வியாளருக்கான முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கதாகும்.

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்களின் மணிவிழா 27.09.2020 காலை 8.30 மணிக்கு யாழ். நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறுவதையொட்டி இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.) ■

# யோகா எனும் அற்புதம்



■ பாலாஜினி

விரைந்து ஓடுகின்றதும், சிக்கல் நிறைந்ததுமான இந்த உலகத்தில் எங்கள் எல்லோரினது வாழ்க்கைப் பயணமும் நின்று நிதானிக்க முடியாத அளவுக்கு வேகம் மிக்கதாக ஆகிவிட்டது. முன்பு போல அனுபவித்து வாழ முடியவில்லை. இயற்கைச் சூழலைத் தூரமாக்கி விட்டு, செயற்கைக்குள் கலந்து போயிருக்கின்றோம். அதனால் தான் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ முடியாத அளவுக்கு தொற்று நோய்களுக்கும், தொற்றாத நோய்களுக்கும் ஆட்பட்டு வருந்துகின்றோம். இவற்றை விட, உடற்பருமன், மனஅழுத்தம் , மந்த நிலை, உடல் சார்ந்த நரம்புப் பிரச்சினைகளும் எம்முடன் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

இவற்றில் இருந்து நாம் விடுபடுவதற்கு அற்புதமான ஒரு வழியாக இருப்பது யோகாசனம் மட்டுமே. இயற்கைத் தொடர்பறுத்த மனிதனை, இயற்கையோடு இணைக்கும் சக்தி யோகாசனத்திற்கு உள்ளது. நான் உடற்பருமன் மற்றும் மந்த நிலை முதலியவற்றில் இருந்து விடுபடுவதற்காக யோகா எனும் அற்புதத்தைத் தெரிவு செய்து அதன் மூலம் நற்பயனையும் பெற்றிருக்கின்றேன்.

யோகா என்பதன் பொருள், ஒன்றுபடுதல் அல்லது இணைதல் என்பதாகும். அதாவது, பிரபஞ்சம் எனும் பெரும் சக்தியோடு நாம் இணைந்து கொள்ளுதலை இது குறித்து நிற்கின்றது. யோகாப்பயற்சிகள் யோகா சூத்திரங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை ஆகும். கி.மு 200 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பதஞ்சலி முனிவரினால் இது எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது. உணவுக்கட்டுப்பாடுகள், மதச் சார்பு , இனச்சார்பு என எவ்வித பிரிவினைகளும் இல்லாது, அனைத்து மனித குலத்திற்கும் உரித்துடையது தான் இந்த யோகாசனம். இப்போது அனைவரினாலும் நடைமுறையில் பின்பற்றப்பட்டு வரும் யோகா, அட்டாங்க யோகா என அழைக்கப்படும். அட்டம் (8 அங்கம்) என்பது, உடல் உறுப்புகள் அதாவது, 8 படிமுறைகளினூடாக உடல் அங்கங்களைத் தொடர்புபடுத்தி இது மேற்கொள்ளப்படுகின்றது. உடல் மட்டுமல்லாது, உள ரீதியான நிறைவினையும் பெறுமதியையும் உருவாக்கக் கூடிய சக்தி யோகாவுக்கு உள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 8 படிமுறைகளும் பின்வருமாறு விளங்கக் கூடியவை ஆகும்.

யமம் Cyama)
நியமம் ( niyama)
ஆசனம் (asana)
பிரணயாமம் (pranayama)
பிரத்யகாரம் (pratyahara)
தாரணம் (dharna)
தியானம் (dhyana)
சமாதி (samadhi)

இவற்றில் இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள சமாதி நிலைதான் மிகவும் உயர்ந்தது. அது இறைவனை அடைவதற்கான வழியைக் காட்டும் என்றாகும். யோகாவைப் பற்றிக் கூற வேண்டுமானால், அதைச் சுருக்கமாக சொல்லுவதென்பது இயலாத காரியம். ஏனெனில், யோகா என்பது மிகவும் விரிவானது. ஆனால் நாம் எமது வாழ்க்கை முறைகளில் ஒரு பகுதியாக இந்த யோகாவை இணைத்துக் கொண்டால், எமது அன்றாட வாழ்க்கை மகிழ்வானதாக அமையும் என்பது உறுதியாகும். யோகாவைச் செய்வதற்கு, முதலில் ஒரு சில தயார்படுத்தல்களை நாம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

யோகாவில் ஈடுபடுவதற்கு மிகவும் பொருத்தமான நேரம் காலைப் பொழுதுதான். அதிகாலையில் கண் விழித்து, முதலில் சிறிதளவு நீரைப் பருகி வயிற்றுக் கழிவுகளை வெளியேற்றியபின்னர் யோகாவில் ஈடுபட்டோமேயானால் அதிகளவு பலனைப் பெற முடியும் என்று சொல்கின்றார்கள். வேலை மற்றும் தொழில் நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் முதலியவற்றை மேற்கொள்வதற்காக காலையிலேயே பயணப்படுவோருக்கு யோகா அருமருந்தாக உள்ளது. பயணத்தின் போது ஏற்படும் தலைவலி, மனஅழுத்தம் என்பவற்றை நீக்கி எம்மை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள யோகா உதவும்.

காலையில் எழுந்து யோகாபயிற்சியில் ஈடுபட முடியாதவர்கள் உங்களது மதிய நேர உணவை உண்டு சரியாக இரண்டு மணி நேரம் கழித்து யோகா பயிற்சியில் ஈடுபட முடியும். தினமும் யோகா பயிற்சியில் ஈடுபட முடியாதவர்கள் வாரத்தின் இறுதி இரண்டு நாட்களிலாவது அதில் ஈடுபடுங்கள். ஆனால் ஒன்றை மட்டும் என்னால் உறுதியாகக் கூற முடியும்.

நீங்கள் யோகா பயிற்சியினுடைய முக்கியத்துவத்தினையும் அதன் விளைவுகளினையும் அனுபவ ரீதியாக உணர்ந்தீர்களேயானால் தினமும் அதில் ஈடுபட முயல்வீர்கள் என்பதே அதுவாகும்.

யோகா பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் எவ்வாறான பயன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதை வரையறுத்துக் கூறிவிட முடியாது. பொதுவாகச் சொல்லப் போனால் அனைத்து வகையான பயன்களையும் தரக்கூடியது யோகா என சொல்லலாம். கொரோனா நோய்த் தொற்று உலக நாடுகள் எங்கிலும் வேகமாக பரவி வரும் இன்றைய நிலையில், தமிழகத்தில் கொரோனா நோய்த்தொற்றுக்குள்ளாகி வென்டிலேட்டரில் உள்ள நோயாளர்களுக்கு "யோகா நித்ரா" எனும் ஒரு வகை சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி உடலில் அதிகரிக்கச் செய்வதுடன், நோய் தொடர்பான பதற்றத்தையும் குறைத்து, இரத்த அழுத்தத்தைச் சீர்படுத்தவும் 'யோகா நித்ரா' சிகிச்சை உதவுகின்றது.

இதனை விட புற்றுநோயாளர்களுக்கான சிறந்த வலி நிவாரணியாக (pain killer) யோகா பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந் நோயாளிகள் செய்யக்கூடிய வகையிலான யோகாசனங்களும், அவற்றுக்கான பயிற்சி முறைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றை விட குடற்புண், தசைப்பிடிப்பு, முடி உதிர்வு, மனச்சஞ்சலம் முதலியவற்றை கணிசமான அளவில் குறைத்துக் கொள்வதற்கும் யோகா ஒரு அற்புதமான வழியாக உள்ளது. இன்று நீரிழிவு மற்றும் புற்றுநோய்க்கு ஆளானவர்களில் பெரும்பாலானோர் யோகாவைத் தமது ஔடதமாகக் கையாண்டு வருகின்றனர். உடற்பருமன் குறைய வேண்டும் என நினைப்பவர்களும், கட்டான உடல் வாகைப் பெற வேண்டும் என எண்ணுபவர்களும், இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துபவர்களும், வாயைக் கட்டி உணவை ஒறுப்பவர்களும் இன்று எம்மத்தியில் அதிகமாக உள்ளனர். இவ்வாறான எவ்வித கட்டுப்பாடுகளுமற்ற அற்புதத்தை யோகா அள்ளி வழங்குகின்றது.

யோகா பயிற்சியில் ஈடுபடுபவர்கள் முதலில் அதற்குப் பொருத்தமான ஆடைகளை அணிந்து கொள்ளல் வேண்டும். எவ்வாறான ஆடை உங்களுக்கு சௌகரியமாக உள்ளதோ அதனை அணிந்து கொள்ளுங்கள். முதலில் இலகுவான பயிற்சிகளை மேற்கொண்டு அவற்றுக்கு உங்களைப் பழக்கமாக்கிக் கொண்ட பின்னர் ஏனைய பயிற்சிகளை மேற்கொள்வது சிறப்பானது. யோகா எனும் அற்புதத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். பயன் பெற்று வாழுங்கள். ■

# கூட்டுறவுக் குறிக்கோளுடன் சேவையாற்றியவர் ருக்குமணி



■ பா.நந்தகுமார்

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற குறிக்கோளுடன் கூட்டுறவுத்துறைக்கு அரும் பணியாற்றி, இவ்வுலகையே விட்டு சென்றவர் நீர்வைக் குரிசில் ருக்குமணி ஆனந்தவேல்.

1967 ஆம் ஆண்டு கூட்டுறவுப் பரிசோதகராக நியமனம் பெற்ற இவர், காலத்துக்குக் காலம் பதவி உயர்வுகள் பெற்று 1991 இல் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

நீர்வேலிக் கிராமத்தைச் சேர்ந்த இவர், தனது ஓய்வுக் காலத்தின் பின்னர், பல்வேறுபட்ட சமூக சேவையில் தன்னை இணைத்துக்கொண்டார். அதிலும் அவரின் சமூகத் தொண்டில் கூட்டுறவுத் துறைக்கு அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற குறிக்கோளுடன் கூட்டுறவுத் துறை நிறுவனங்களில் பல்வேறு பட்ட பதவிகளில் இருந்து மக்களுக்குச் சிறந்த சேவையாற்றினார்.

நீர்வேலித் தெற்கு ஸ்ரீமுருகன் மாதர் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலித் தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், வலி கிழக்கு கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம், யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம், மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய் பிராந்திய சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கசமாசம் போன்ற கூட்டுறவு அமைப்புகளில் தலைவராகச் செயற்பட்டு, சிறப்பான முறையில் சேவையாற்றி அனைவரதும் பாராட்டைப் பெற்றார். அதனைவிட ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புக்களிலும், உறுப்பினராக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார்.

இவ்வாறு பல்வேறுபட்ட சமூக சேவைகளில் ஈடுபட்ட இவருக்கு பல்வேறுபட்ட விருதுகள், பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

சமூக சேவகி, சமூக பந்து, நீர்வை குரிசில் சிறந்த பெண்மணி போன்ற பட்டங்களை தன்வசம் ஆக்கிய பெருமை இவரைச் சார்ந்தது. கூட்டுறவு என்னும் ஒளி மூலமாக பல பெண்களைக் கூட்டுறவில் இணைத்து, அதன் வளர்ச்சிக்கு உதவினார். ■




## பயிற்சிநெறி பூர்த்தி

நிந்தவூர் பிரதேச செயலக உளவளத் துணைப்பிரிவு நடத்திய திருமணத்திற்கு முந்திய உளவளத் துணை மற்றும் வாழ்க்கைத்திறன் பயிற்சியின் பூர்த்தி நிகழ்வும், பயிற்சி முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்ஸார் தலைமையில் நடைபெற்றது.
பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க, தென்கிழக்கு பல்கலைக் கழக வர்த்தக முகாமைத்துவப்பீட தலைமை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சித்திசபீனா எம்.ஜி. ஹஸன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.
பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த 163 மாணவியர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

**காலத்திற்கு ஏற்ற கற்கைநெறி!**

## இலக்கிய விழா!

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடாந்தம் நடத்தும் மாகாண மட்ட இலக்கிய விழா இம்முறை அம்பாறை மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.
குறிப்பாக தமிழ் மொழி மூலமான இலக்கிய விழா அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அக்கரைப்பற்றிலும், சிங்கள மொழி மூலமான விழா உகனையிலும் நடைபெறவுள்ளதாக பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எஸ். நவநீதன் தெரிவித்தார்.

**பண்பாட்டுக் கோலம் பூணுவோம்!**

## ஒட்டிக் கொள்ளுமா?

பொதுஜன பெரமுன அரசு அமைந்தால் முஸ்லீம்களுக்கு பெரும்பாதகம் விளையுமென தேர்தல் காலத்தில் சூடான பிரச்சாரம் மேற்கொண்ட முஸ்லீம் காங்கிரஸ் கட்சி இன்றைய கோட்டா அரசுடன் (பொதுஜன பெரமுன) ஒட்டிக் கொள்ளப் போவதான தகவல்கள் தென்கிழக்கு அரசியல் களத்தில் அடிபடத் தொடங்கியுள்ளது.
"முஸ்லீம்களின் அபிலாஷைகள் நிறைவேற அரசுடன் பேசுவதில் தவறில்லை" என்ற கோஷத்தை முஸ்லீம் காங்கிரஸ் எம். பிக்கள் சிலர் முன்னெடுத்து வருவது, மக்களை இந்த விடயத்தில் கவனம் கொள்ளச் செய்துள்ளது.
அரசுடன் 'டீல்' முடியும் தறுவாயிலிலாம்! இனி என்ன தாவுவதற்கான தருணமும் நெருங்குவதாகத் தகவல்!

**"நம்மவர்கள் ஜம்பிங்சம்பியன்கள்தானே!" என்கிறார் முஸ்லீம் காங்கிரஸ் போராளி ஒருவர்!**

**அனார்கலி**

# தென்கிழக்கு திசையில் இருந்து....






## தந்தை செல்வா!

"1949 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே தந்தை செல்வா முஸ்லீம்களின் சுய நிர்ணயத்தை அங்கீகரித்திருந்தார். அவ்வாறே கல்முனைத் தொகுதியை முஸ்லீம்களுக்குரிய பிராந்தியமாகவும், அடையாளப்படுத்தியிருந்தார்.
இவ்வாறு, முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், முன்னாள் இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான "முழக்கம்" ஏ.எல். அப்துல்மஜீத் கூறினார்.
கல்முனையில் நடைபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் 20 ஆவது வருட நினைவு தின நிகழ்வு ஒன்றில் சிறப்பு பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.
தந்தை செல்வாவின் வழியிலேயே முஸ்லீம்களின் சுய நிர்ணயத்தை முன்னிறுத்தி 1981 ஆம் ஆண்டு மர்ஹூம் அஷ்ரப் முஸ்லிம்களுக்கான தனிக் கட்சியான முஸ்லீம் காங்கிரஸை உருவாக்கினாரெனவும் தவிசாளர் அப்துல் மஜீத் கூறினார்.

**"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"**



## ஹரீஸின் கவலை!

"முஸ்லீம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆட்சியாளர்களுடன் பேசித்தானாக வேண்டும். ஆனால் அவ்வாறு நாம் செயற்படுகின்ற போது ஊடகங்கள் சில நாம் கட்சி மாறப் போவதாக வதந்திகளைக் கட்டவிழ்த்து விடுகின்றன."
இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம் ஹரீஸ் கவலை வெளியிட்டுள்ளார்.
சாய்ந்தமருது பிரதேசத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வு ஒன்றில் இதனைக் குறிப்பிட்ட ஹரீஸ், பலமான அரசு அமைந்துள்ள இன்றைய நிலையில், எமது சமூகத்திற்காக அரசுடன் பேசித்தானாக வேண்டும் எனவும் நியாயம் கற்பித்தார்.

**"20இன் வாக்கெடுப்பு வரும் போது எல்லாமே வெளிச்சத்திற்கு வரும்"**

## புதிய உறுப்பினர்!



கல்முனை மாநகரசபையின், நல்லாட்சிக்கான தேசிய முன்னணிசார்பிலான புதிய உறுப்பினராக மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி என்.ஏ.எம். அஸாம் பதவியேற்றுள்ளார்.
கல்முனை மாநகர சபையின் நல்லாட்சிக்கான தேசிய முன்னணிசார்பிலான உறுப்பினராக இதுவரை பதவி வகித்து வந்த தாஜீதீன் முபாரிஸ் இராஜினாமாச் செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே சட்டத்தரணி அஸாம் நியமனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**"பழையன கழிதலும், புதியன புகுதலும்."**



## யானைகளின் அட்டகாசம்!

காட்டு யானைகளின் அட்டகாசங்களும், அட்டூழியங்களும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.
காடுகளிலிருந்து நெல்வயல் வெளிகளூடாக மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களை நோக்கிப் படையெடுக்கும் யானைகள் தென்னந்தோப்புகள், தோட்டங்களில் பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருவதுடன், சில குடியேற்றப் பிரதேசங்களில் வீடுகள், உடமைகளையும் சேதமாக்கி வருகின்றன.
குறித்த மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டங்களிலும் இவ் விடயம் ஆராயப்பட்டு யானை வேலிகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்த தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

**"யானைமனிதன் போர் முடிவுக்கு வருமா?"**



## தொற்றா நோய் விழிப்பூட்டல்

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தொற்றா நோய்கள் தொடர்பிலான சிகிச்சை முகாம்களும், விழிப்பூட்டல் நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.
கல்முனைப் பிராந்திய தொற்றா நோய்த் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில் தொற்றா நோய் தொடர்பிலான விசேட சிகிச்சை முகாம்கள் இடம்பெற்று வருவதுடன், இரத்தப் பரிசோதனை உட்பட ஆரோக்கியமான வாழ்க்கை முறை, உணவுப் பழக்கவழக்கங்கள் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்குகளும் இடம்பெற்று வருகின்றன.

**விழிப்பூட்டல் பயன் தரும்!**

# கோத்தாபய அரசின் கனவு ஒருபோதும் நிறைவேறாது

## சரத் பொன்சேகா எம்.பி. சூளுரை

**கொழும்பு, செப்.27**

**பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு எதனையும் சாதித்துவிடலாம் என்று கோத்தாபய தலைமையிலான அரசாங்கம் பகல் கனவு கண்டு வருகிறது. அது ஒருநாளும் நிறைவேறாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**


மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வைத்துக் கொண்டே மஹிந்த அரசாங்கம் 18ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து இறுதியில் ஆட்சியே பறிபோனதை தற்போதைய அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும் என அவர் எச்சரித்துள்ளார்.

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி 20ஆவது திருத்தச் சட்ட யோசனைக்கெதிராக களனி ராஜமகா விகாரையில் நேற்றுமுன்தினம் விசேட பூசை, வழிபாடுகளை நடத்தியது.

இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட கட்சியின் பல முக்கியஸ்தர்க்ள் கலந்துகொண்டிருந்தனர். இந்த வழிபாடுகளின் பின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது;

20ஆவது அரசமைப்புத் திருத்த யோசனையின் ஊடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிடும். நீண்டகாலத்திற்கு அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்கின்ற அவருடைய கனவும் கலைந்துவிடும். எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் இந்த 20ஆவது திருத்தத்தைத் தோற்கடித்தால் தான் 'பிரதமர் மஹிந்தவின் கனவு நனவாகும்.

அதேபோல 18ஆவது திருத்தச் சட்டத்தையும் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடனேயே அப்போதைய அரசாங்கம் கொண்டுவந்திருந்தது. இருந்தபோதிலும் இறுதியில் அரசாங்கமே அள்ளுண்டுபோனது. ரணில் மற்றும் மைத்திரி கூறிய விடயங்கள் இன்று குப்பைத் தொட்டியில் போடப்பட்டுவிட்டன. மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கியமைக்காக நாட்டையே ஏப்பமிடுவதற்கு இடமளிக்க முடியாது - என்றார். (ப)



# வெடி மருந்துகளுடன் இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, செப்.27

வென்னப்புவ லுனுவில பகுதியில், வாள், கத்திகள் மற்றும் வெடிமருந்துகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலையடுத்து வென்னப்புவப் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து, வெளிநாட்டு வாள்கள் ஐந்தும், கத்திகள் நான்கும், 102 வெளிநாட்டு வெடிபொருள்களும் கைபற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-இ)

# மேல் மாகாணத்தில் திடீர் சுற்றிவளைப்பு

*402 பேர் கைது*

கொழும்பு, செப்.27

மேல் மாகாணத்தில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் 402 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 6 மணிமுதல் நேற்றுக் காலை 5 மணிவரை நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே இவ்வாறு பலர் கைதுசெய்யப்பட்டனர்.

இதில் 143 பேர் ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், மேலும் 77 சந்தேகநபர்கள் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டிலும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 90 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 20 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு, சட்டவிரோத போதைப் பொருள்கள்வைத்திருந்த 72 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-இ)

# கொரோனாவிலிருந்து 28 பேர் பூரணகுணம்

கொழும்பு, செப்.27

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 28 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 186 ஆக அதிகரித்துள்ளது. தொற்று உறுதியானவர்களில் 146 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 36பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 3 ஆயிரத்து 345 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

*நல்லிணக்க முயற்சி குறித்து*

# இலங்கை-கனடா சந்தித்துப் பேச்சு

கொழும்பு, செப்.27

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் குறித்து கனடாவும், இலங்கையும் சந்திப்பை நடத்தியுள்ளன. இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இலங்கையின் வெளியுறவு அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கனடாவின் உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன், இலங்கையின் வெளியுறவுத்துறைச் செயலாளர் ஜெயநாத் கொலம்பகேயுடன் நல்லிணக்க முயற்சிகளின் முன்னேற்றங்கள் குறித்தும் தடைகள் குறித்தும் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள், கொரோனாத் தொற்று விடயங்களும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளன. (ப-இ)

*ஹெரோய்னுடன்*

# பி.சபை உறுப்பினர் உட்பட மூவர் கைது

கொழும்பு, செப்.27

இபலோகம பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட மூவர் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட அவர்களிடமிருந்து 3 கிராம், 65 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இபலோகம சேனபுர, மஹாமீகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்தர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# ஆணைக்குழு முன் நேற்று விஜயகலா

கொழும்பு, செப்.27

அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் முன்னிலையாகியுள்ளார்.

நேற்றுக் காலை 10.20 மணியளவில் அவர் ஆணைக்குழுவில் முன்னிலையானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் அவர் கடந்த 17 ஆம் திகதி அங்கு முன்னிலையாகியிருந்தார். அன்றைய தினம் சாட்சிப் பதிவை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இருக்கவில்லை என்பதன் காரணமாக நேற்று மீண்டும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ப)

# பாத யாத்திரை

கொடிகாமம், செப்.27

வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு புனித திருத்தல பாத யாத்திரை நாளை திங்கட்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து புறப்படவுள்ளது.

நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளரவும் உலகெங்கும் பரவி வரும் கொரோ னா நோய் இல்லாது ஒழியவும் இறையருள் வேண்டி புனித திருத்தலப் பாத யாத்திரை முன்னெடுக்கப்படவுள்ளது. (ப-159)

# சட்டவிரோத மணல் அகழ்வு; ஐவர் கைது

விசுவமடு, செப்.27



சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, விசுவமடு, குளப்பகுதியில் அனுமதியற்ற மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐவரே இவ்வாறு நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயன்படுத்திய உழவு இயந்திரங்களும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவித்த புதுக்குடியிருப்பு பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றனர். (ப-ரி1)

# போலி ஆவணத்துடன் கார் விற்க முயற்சித்த இருவர் கைது

போலி ஆவணத்தை தயார் செய்து கார் விற்பனையில் ஈடுபட முயற்சித்த இருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.



சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:
நெல்லியடி பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஒருவர் கார் விற்பதற்காக விலையும் பேசி நேற்றையதினம் காரை நெல்லியடி பகுதிக்கு கொண்டு சென்றுள்ளார். காரின் ஆவணத்தை லீசிங் கொம்பனியில் விசாரித்த போது லீசிங் கொம்பனிகாரர்களால் தம்மிடம் தான் அந்தப் புத்தகம் உள்ளதாக கூறியுள்ளனர். இதனால் காரை வாங்க முற்பட்டவர் சுதாகரித்துக் கொண்டு நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து குறித்த இடத்திற்கு வந்த பொலிஸார் விற்பனையில் ஈடுபட முனைந்த இருவரைக் கைதுசெய்தனர். அவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-422,26)






# 20 ஐ தோற்கடிப்போம்

## சஜித் விடாப்பிடி



கொழும்பு,செப்.27

**ஜனநாயகத்துக்கும், நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரசால் முன்வைக்கப்பட்டுள்ள, 20 ஆவது திருத்த சட்ட வரைவை தோல்வியடையச் செய்வதே எமது பிரதான நோக்கம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் 'வெல்வோம்' தேர்தல் பிரசார நிலையங்களை ஸ்தாபிக்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட நிகழ்வுகள் அநுராதபுரம் மாவட்டத்தை முதன்மைப்படுத்தி நேற்று இடம்பெற்றன.

இதன்போது அநுராதபுரம் கெக்கிராவ விகாரைக்குச் சென்று வழிபட்ட பிரேமதாச பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அரசால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால், நாடு பல பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். அதனூடாக ஜனநாயகக் கொள்கைகளுக்கும் சிக்கல்கள் ஏற்படும் ஆபத்து இருக்கின்றது. இந்த நிலையில் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவை தோல்வியடையச் செய்வதே எமது பிரதான நோக்கம்.

நாங்கள் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் கருத்து தெரிவித்திருந்ததுடன் , அதற்கு வெளியிலும் அது தொடர்பில் பேசியிருந்தோம்.

இந்த நிலையில் இந்த திருத்தத்தைத் தோல்வியடையச் செய்வதற்காக தொடர்ந்தும் எமது செயற்பாடுகளை முன்னெடுக்கவும் எதிர்ப்பார்த்திருக்கின்றோம். என்றார். (க-இ)

# நல்லாட்சி பலவீனமடைய 19 திருத்தமே காரணம்

## திஸாநாயக்கவின் கண்டுபிடிப்பு

இலங்கை அரசியல் தன்மைக்குப் பொருத்தமற்ற ஏற்பாடுகளையே அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் கொண்டிருந்தது. நல்லாட்சி அரசு பலவீனமடைவதற்கு இந்தத் திருத்தமே மூல காரணியாக அமைந்தது.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர். எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசின் இலட்சியம் என பெருமை கொண்டார். திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் செயற்படுத்தப்படும் போது, அதன் விளைவுகள் முத்துறைக்குமி டையில் அதிகார முரண்பாட்டைத் தோற்றுவித்தன. இறுதியில் அவரே 19 ஆவது திருத்தத்தை சாபக்கேடு என விமர்சிக்க ஆரம்பித்தார்.

19 ஆவது திருத்தம் இலங்கை அரசியல் தன்மைகளுக்கு பொருத்தமற்ற ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது. திருத்த ஏற்பாடுகள் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் ரசனையாகக் காணப்பட்டன.

ஆனால் நடைமுறை அரசியலுக்குப் பொருத்தமற்றதாக இருந்தது என்பதை அனுபவ ரீதியில் கடந்த அரசின் முக்கிய தரப்பினர்கள் உணர்ந்து கொண்டனர். அரச நிர்வாகத்தில் அரசியலமைப்பு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகவே 20 ஆவது திருத்தம் மாறுபட்ட பல விடயங்களைக் கொண்டுள்ளது. என்றார். (க-இ)



## மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம்,செப்.27

உசன் ஐக்கிய நாணய சங்கத்தால் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை பொது மண்டபத்தில் சங்கத் தலைவர் கா.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

பொதுப் பரீட்சைகளில் சாதனை படைத்த மாணவர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாவரவியல் துறை இணைப் பேராசிரியர் கலாநிதி பத்மநாதன் செவ்வேள், சிறப்பு விருந்தினர்களாக உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் க.சண்முகதாஸ், உசன் கிராம அலுவலர் இ.இராஜசுதாகர், உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா கு.விமலதாஸ் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்ற மாணவர்களான சி.சரூஜனன் மற்றும் ரா.ராஜிகா, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் உயர்சித்தி பெற்ற சி.டிலோஜினி, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்திய டைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற ச.தர்சிகா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-159)

## மூவர் கைது

கொழும்பு,செப்.27

மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் உள்ளிட்ட மூவர், ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நீர்கொழும்பு பொலிஸ் குற்றவியல் பிரிவினரால் சீதுவையில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து 150 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)


# கொல்கத்தா நேற்று பதற்றமற்ற வெற்றி!

## ஹைதராபாத்தை புரட்டியது



டுபாய், செப்ரெம்பர் 27

ஐ.பி.எல் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பதற்றம் எதுவுமின்றி ஹைதராபாத்தைத் தோற்கடித்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ். இதையடுத்து தொடரில் தனது முதல் வெற்றியையும் அந்த அணி பதிவு செய்தது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் பேர்ஸ்ரௌவ். 10 பந்துகளில் வெறும் 5 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார் பேர்ஸ்ரௌவ். வோர்ணருடன் இணைந்து நீண்ட இணைப்பாட்டத்தை வழங்கினார் மனீஸ் பாண்டே. எனினும் இருவராலும் பெரியளவில் அதிரடியைக் காட்டமுடியவில்லை. 30 பந்துகளில் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வோர்ணர். மனீஸ் பாண்டே அரைச்சதம் கடந்தார். நான்காம் நிலை வீரரான சகாவும் மந்த கதியிலேயே விளையாடினார். அவரால் 31 பந்துகளில் 30 ஓட்டங்களையே பெறமுடிந்தது. முடிவில் 142 ஓட்டங்களையே ஹைதராபாத் அணி பெற்றது.

பந்துவீச்சில் கம்மின்ஸ், வருண், ரசல் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். கம்மின்ஸ் சிக்கனமான முறையில் பந்து வீசினார். அவர் 4 பந்துப் பரிமாற்றங்களில் 19 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் ஆரம்ப வீரரான நரைன். மறுமுனையில் சீரான சராசரியில் விளையாடிக் கொண்டிருந்தார் கில். ரணா 13 பந்துகளில் 26 ஓட்டங்களைக் குவித்துக் கெத்துக் காட்டினார். அணித் தலைவர் டினேஸ் கார்த்திக் ஓட்டமெதையும் பெறாது ஏமாற்றினார். கில்லுடன் மோர்கன் இணைந்து சிறப்பாக விளாடினார். இந்த இணையைப் பிரிப்பதற்கு ஹைதராபாத்தால் இயலவில்லை. 2 பந்துப் பரிமாற்றங்கள் மீதமிருக்க மிகமிக இலகுவாக வென்றது கொல்கத்தா. கில் 70 ஓட்டங்களுடனும் மோர்கன் 42 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர். (ம)

## வாடகைக்குண்டு

சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குண்டு
(Annex) அத்துடன் அறைகள் வாடகைக்குண்டு.

**077 741 2713, 077 724 2427**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து
வயோதிப தாய் ஒருவரைப் பராமரிப்பதற்கு
50 வயதிற்குட்பட்ட
வீட்டுப்பணிப்பெண் உடன் தேவை.

**077 777 0394**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேகபூர்வமான சேவை
AAA Gold Centar

**076 568 4346**

## தேவை

திருகோணமலையில் உள்ள பிரபல
சீன மற்றும் இந்திய உணவகத்திற்கு
(Indian and Chinese
Restaurant) Chinese and
Western உணவுகள் தயாரிக்க
கூடிய Chef தேவை.

**077 735 0108**

## காணி தேவை

ஆனையிறவு உப்பளத்திற்கு 10 Km சுற்று வட்டாரத் திற்குள் அமைந்த 10 ஏக்கர் வெற்றுக் காணி தேவைப் படுகின்றது. இக் காணி A9 வீதியை முகப்பாகவும் 3Phase மின் இணைப்பை பெறக்கூடிய வசதியை கொண்ட தாகவும் இருக்கவேண்டும். இப் பிரதேசம் வெள்ளப் பெருக்கு அற்ற மற்றும் கடல் நீர் இணைப் பற்ற இடமாகவும் இருத்தல் வேண்டும்.

**CBL** Convenience Foods Lanka PLC
Ramani kamalanathan
077 370 5504

## விற்பனை

TATA Ten Wheels
Tank Body டாங்கியுடன்
விற்பனைக்குண்டு.
LF - LG - LL - LM பதிவு இலக்கம்
கொண்டது LPT - 2515 மற்றும்
LPT - 2516 ஆகிய வாகனங்கள் உண்டு.

**077 735 0108**

## வீட்டுப் பராமரிப்பாளர் தேவை

சுன்னாகம் பகுதியில் தங்கியிருந்து
வேலை செய்யக்கூடிய 40 வயதுக்கு
மேற்பட்ட ஆண் ஒருவர் தேவை.
சிங்களம் பேசக் கூடியவர்
விரும்பத்தக்கது.

**077 956 4305**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச உத்தி
யோகத்தர் குடும்பம் ஒன்றிற்கு
வீட்டுப்பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
**077 960 4079, 077 086 8634**

## தேவை

திருகோணமலையில் தங்கி
யிருந்து வீட்டு வேலை
செய்தற்கு ஒரு வேலையாள்
தேவை. பெண்கள்
விரும்பத்தக்கது

**077 735 0108**

## விற்பனைக்கு

அரிசிமா, மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம். விநியோக வசதி இலவசம்.

**077 772 2215**

## தேவை

- ஓவ் செற் மெஷின் மைண்டர் (Minder)
- ஓவ் செற் மெஷின் மைண்டர் உதவியாளர் (இருப்பிட வசதிகள் வழங்கப்படும்)
- ரைப் செட்டிங் டிசைனர் (Designer) ஆண். பெண் விரும்பத்தக்கது.
- ரைப் செட்டிங் தெரிந்தவர்கள் விரும்பத் தக்கது.

-கோப்பாய் மத்தி

தொடர்பு: **077 774 6855**
**021 223 1644**

## ஆசிரியர் தேவை

2ம் ஆண்டு, 4ம் ஆண்டில் English Medium த்தில் படிக்கும் மாண வருக்கு, வீட்டில் வந்து படிப்பிப் பதற்கு ஆசிரியர்கள் தேவை.
*பெண் ஆசிரியர் விரும்பத் தக்கது.

-கோப்பாய் மத்தி

தொடர்பு: **077 774 6855**
**021 223 1644**

## காணி தேவை

கிளிநொச்சி, பூநகரி
பகுதிகளில் சுமார்
(4 ஏக்கர் - 100 ஏக்கர்)
வரையிலான காணி
தேவை.

தொடர்பு: **075 925 1036**
நேரம்: (காலை - 9.00 முதல் மாலை 5.30 வரை)

## வீடு வளவு விற்பனைக்கு

மானிப்பாய் பிரதேசத்தில்
அமைந்துள்ள 4 பரப்புடன் வீடு
விற்பனைக்குண்டு

**077 421 3305, 077 439 4231**




**US DIVERSITY VISA LOTTERY 2022**

Registration will commence in
1st Week of October 2020 till
1st Week of November 2020

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள் **0777 761 346**

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute
10 வருட கால நம்பிக்கையான சேவை

## ஆட்டோமேட்டிக் வேன் உடனடியாக தேவை

1. வஜிர ஹவுஸ் யாழ்ப்பாண கிளையில் (நல்லூர் கச்சேரி வீதி) வேலைபார்க்கும் எமது பொறியியலாளர் ஒருவருக்கு (ஆட்டோமேட்டிக் வேன்) வாகனம் உடனடியாக தேவை
2. சிறிய ஆட்டோமேட்டிக் வேன் ஒன்று தேவை
3. மாத வாடகை 50,000 ஒரு வருடத்திற்கு 6 இலட்சம் மூன்று வருடத்திற்கு 40 இலட்சம்
4. நாங்கள் நல்ல நிலையில் கவனித்துக்கொள்ளுவோம்





தமிழ் பேசும் முகவர்
யாழ்பாணம் மட்டக்களப்பு
சப்திக்கா டிஷனோ

தொடர்புகளுக்கு உடனே
அழையுங்கவள்
**070 4312356**
யாழ்ப்பாண கிளை
54/11,கற்பக பிள்ளையார் கோவில்
கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்

1916 ம் ஆண்டு தொடக்கம், 104 வருட 4 தலைமுறையாக
தொடரும் கட்டிட நிமாண துறையின்
**வஜிர ஹவுஸ்**
தலைமை அலுவலகம்:23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிடி

## குத்தகைக்கு காணி தேவை

சிறிய அளவிலான Restaurant ஒன்று
அமைப்பதற்கு ஏதுவாக யாழ். கிளிநொச்சி,
முல்லைத்தீவு மாவட்டங்களில் குறைந்தது
ஒரு பரப்பிற்கு மேற்பட்டவாறு வெற்றுக்காணி
நீண்டகால குத்தகைக்குத் தேவை.

